Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–17 | 01–08–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –165




-இராணுவப் புலனாய்வுத்துறையுடன் இணைந்து செயற்பட்ட-

# பல தமிழர் படுகொலைகளுடன் சம்பந்தப்பட்ட

# 'புளொட் மோகன்' கொழும்பில் சுட்டுக்கொலை

## உந்துருளியில் வந்தோர் தாக்குதல்

(கொழும்பு)

**சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினருடன் இணைந்து செயற்பட்டவரும், கிழக்கில் நடந்த பல இனப்படுகொலைகளுக்கு சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பிற்கு உதவியவருமான 'புளொட மோகன்' என அழைக்கப்படும் கந்தையா யோகராசா நேற்று முற்பகல் பம்பலப்பிட்டியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

டுப்ளிக்கேசன் வீதியில் பகல் 11.20 மணிக்கு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. முச்சக்கரவண்டியில் வந்த இவர் மீது, இரண்டு உந்துருளிகளில் வந்தவர்களே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டதாகப் பொலிசார் கூறுகின்றனர்.

சிறியரக இடுப்பில் மறைத்துச் செல்லக்கூடிய கைத்துப்பாக்கி போன்ற ஒன்றின் மூலமே அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகப் பொலிசார் கூறுகின்றனர். இதன் போது இறந்தவரின் அடையாள அட்டை கிடைக்கப் பெற்றதாகவும், இறந்தவர் அதன் மூலம் 41 வயதுடைய கந்தையா யோகராசா என அடை

(12ஆம் பக்கம்பார்க்க)



புளொட் மோகன்

## இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்தும் தனித்தும் பல கொலைகளைப் புரிந்தவர் மோகன்

### தமிழரசுக்கட்சிப் பா.உ..அரியநேந்திரன்

சுட்டுக் கொல்லப்பட்ட புளொட் மோகன் இராணுவப்புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து பல தேச விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் பல படுகொலைகளை நேரடியாகவே செய்தவர் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் புளொட் மோகன் என்பவர் கடந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்ற தமிழினப் படுகொலைகளிற்குநேரடியாகவும், சிறிலங்காப் படையினரது உதவியுடனதும் கொலைகளைச் செய்ததாக அந்தக் காலப்பகுதியில் மக்களால் கூறப்பட்ட ஒருவராவார். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சத்துருக்கொண்டான், வந்தாறுமூலைகிழக்குப் பல்கலைக்கழக படுகொலைகளில் அப்போதைய

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏழு பெண்போராளிகள் அதிரடிப்படையால் கைது

சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் ஏழு பெண்போராளிகள் அக்கரைப்பற்றில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ரீ-56 துப்பாக்கிக்குரிய ரவைகள் இரண்டு,சயனைட்குப்பிகள் இரண்டு என்பன இவர்கள் வசம் இருந்ததாக குற்றஞ் சாட்டி இவர்களை கைது செய்த அதிரடிப்படையினர் அக்கரைப்பற்று பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று மாலை கோமாரியில் இருந்து கொம்படிநோக்கிச் சென்றபோதே இப் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் பஸ் வண்டிச்சாரதி மற்றும் நடத்துனர் ஆகியோரும் வேறு இரண்டு பொது மக்களும் கைதாகியுள்ளனர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் மோகனின் கொலை படைத் தரப்பிற்குப் பெரும் இழப்பு!

(கொழும்பு)

புளொட் மோகன் கொலை செய்யப்பட்டமையானது சிறிலங்கா இராணுவப் புலனாய்வு துறையினருக்குப் பெரும் பின்னடைவாகும் என கொழும்பில் உள்ள இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.கருணாவைவிட புளொட் மோகன் இராணுவப் புலனாய்வுத் துறையினருக்கு முதன்மையானவர் எனத் தெரிவித்த இவ் ஆய்வாளர் விடுதலைப்புலிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் இவர் முக்கிய புள்ளிகளுள் ஒருவர் எனவும் தெரிவித்தார்.

அரசாங்க வேலை வாய்ப்பில்

## கிளி. பட்டதாரிகள் புறக்கணிப்பு போராட்டம் நடாத்த முஸ்தீபு

பட்டதாரிகள் நியமனத்தில் கிளிநொச்சி மாவட்டப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையில் இப் புறக்கணிப்பு ஓரிரு நாட்களில் முடிவுக்கு வராத பட்சத்தில் வெகுசனப் போராட்டங்களில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது என கிளி. மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில்,

பொதுத்துறையில் பொருத்தமான வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதில் கிளிநொச்சி மாணவர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளனர். நிதியமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்டு நியமனத்திற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பம்பலப்பிட்டிச் சம்பவம் அமைதிச் சூழலுக்குப் பாதகம்

### சிறில.தகவல் திணைக்களம் அறிவிப்பு

நேற்று பம்பலப்பிட்டியில் முன்னாள் புளொட் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தற்போதைய அமைதிச் சூழலுக்கு பாதகம் ஏற்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசாங்கத்தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கொலைச்சம்பவம் சமாதா முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்ப

(12ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன்பாலசிங்கத்துடன் விதார்ஹெறல்கேஷன் சந்திப்பு

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெறல்கேஷன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். லண்டனில் உள்ள அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேயின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்காவிடில் சர்வதேச உதவிகளை இழக்க நேரிடலாம்

### தெற்காசிய விவகாரங்களுக்கான அமெ.பிரதிராஜாங்கச் செயலாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்திப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். தற்போதைய நிலைமையை பயன்படுத்தத் தவறினால் சர்வதேச உதவிகளையும், அமெரிக்காவின் ஒத்துழைப்பையும் இழக்கவேண்டி ஏற்படுமென தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் பிரதிராஜாங்கச் செயலாளர் டொனால்ட் காம்ப் தெரிவித்துள்ளார்.

இரு நாள் விஜயத்தினை மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்த டொனால்ட் காம்ப் இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உடனடியாக பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பது மிக அவசியம் என வலியுறுத்திக் கூறியதோடு இலங்கையின் தற்போதைய நிலைமைகள் உதவி வழங்கும் நாடுகள் தமது உதவிகளை நிறுத்திக்கொள்வதற்கு வழிவகுக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.

நோர்வே தரப்பின் மத்தியஸ்த முயற்சிகளுக்கு தாம் ஆதரவளிப்பதாகக் கூறிய அவர் தற்போதுள்ள நிலைமையினை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக் கொலை

வெலிகந்தையின் பிரதான பகுதியில் வைத்து கருணாவின் சகா என நம்பப்படும் நபரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பொலநறுவை மாவட்டம் முத்துக்கல் எனும் கிராமத்தைச் சேர்ந்த சிவநாயகம் புஸ்பகுமாரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சிங்களப் பிரதேசமான வெலிகந்தைப் பிரதேசமானது மட்டு.அம்பாறை மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளில் தாக்குதலை மேற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சோ.துரைராசா A.C NO.32996 தேசியசேமிப்பு வங்கிக் கணக்குப் புத்தகம் தவறிவிட்டது. எடுத்துத் தருபவருக்கு சன்மானம் தரப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சோ.துரைராசா NO 49, 5ஆம் பண்ணை கனகபுரம் அல்லது கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் (4865)

### தவறிவிட்டது

சிவசுப்பிரமணியம்-சிவகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதிஅடையாள அட்டை, தற்காலிக பயணஅனு மதிச்சீட்டு மற்றும் சில பற்றுச்சீட்டுக்கள் அடங்கிய பிறவுண் நிற சிறிய பேர்ஸ் 28.07.2004 அன்று புதுக்குடியிருப்புப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைத்துதவவும். (9173)

### ஆங்கில வகுப்புக்கள

O/L மற்றும் A/L (Genral English) மாணவர்களுக்கும், ஏனையோருக்குமான விசேட ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம். 15 பேரைக் கொண்ட பிரிவாக வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்படுவதனால் ஒவ்வொரு மாணவரிலும் விசேட கவனம் செலுத்தப்படும். மேலதிக விபரங்களுக்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும். மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளமையால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பி.எஸ்.ரி தொழில்நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி.ஆசிரியர்:Yokan (B.B.A, Dip.in Eng) நிர்வாகம். (4867)

### கண்டெடுப்பு

(உடையார்கட்டு)

பிரான்சிஸ்சேவையர் ரோணி டினேஸ்குமார் (823424248 V) என்பவருடைய ஆள் அடையாள அட்டையும் சில முக்கிய ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டு உடையார்கட்டு நாகாபுகைப்படக் கலையகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (19)

**- சாவகச்சேரி சரசாலைப் பகுதியில் -**

# கைதுசெய்யப்பட்ட சாராய வியாபாரி பொலிசாரின் ஒத்துழைப்புடன் விடுதலை

சாவகச்சேரி, சரசாலைப் பகுதியில் கடந்த ஒன்றரை வருடங்களாகச் சாராயம் விற்றுவந்த சாராய வியாபாரியை இப்பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் கனகம்புளியடி சிறிலங்காப் பொலிசார் கைது செய்தனர். இந்தச் சாராய வியாபாரியிடம் தென்மராட்சிப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் இருந்து வரும் சாராய வியாபாரிகள் இவரிடம் இருந்து சாராயம் வாங்கி விற்று வருவதாகத் தெரியவருகிறது. நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில்நுணாவிலில் அமைந்துள்ள சிறிலங்கா பொலிஸ் நிலையத்தில் இருந்து இவர் விடுவிக்கப்பட்டுள்ளார். இவருடைய உறவினர்கள் மற்றும் இப்பகுதியில் உள்ள சிலருடைய உதவியுடன் பொலிசாருடைய பரிபூரண ஒத்துழைப்புடன் இவர் விடுவிக்கப் பட்டுள்ளார். இவருடைய வீட்டில் இருந்தும் விற்ற இடத்தில் இருந்தும் சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. சிறிலங்காப் பொலிசாரின் இச்செயல் இப்பகுதி மக்களிடம் பெரும் விசனத்தைத் தோற்றுவித்திருக்கிறது. சிறிலங்காப் பொலிசார் சமூகக்குற்றவாளிகளுக்கு துணைபோகும் சம்பவங்கள் பலவிடயங்களில் இடம்பெற்று வருவதாகவும், இப்பகுதியில் பலசமூக விரோத செயல்கள் இடம் பெற்று வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## வயோதிபரின் சடலம் மல்லாவியில் கண்டுபிடிப்பு

(துணுக்காய்)

மல்லாவி நகரில் மதுபான நிலையம் அமைந்துள்ள பின் பகுதியில் வயோதிபரின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணிக்கு மதுபானசாலையில் நின்றவர்களால் கண்டுபிடிக்கப் பட்டது.இது சிதம்பரப்பிள்ளை சுந்தரலிங்கம் (வயது 55) என்பவரது என இனம் காணப்பட்டது. மல்லாவி 1ஆம் யுனிட்டில் வசித்து வந்த இவர் 4 பிள்ளைகளின் தந்தையாவார்.தகவல் அறிந்த காவல் துறையினர் சடலத்தை மீட்டு துரித விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# வட-கிழக்கிலிருந்து கொழும்பு செல்லும் ரயில்களில் தமிழரிடம் கொள்ளை

வட-கிழக்கிலிருந்து கொழும்புக்குச் செல்லும் ரயில்களில் கொள்ளைக் கோஷ்டிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்துமுள்ளனர்.

பொலிசார் என்று தங்களை அடையாளம் காட்டும் கும்பலொன்று பயணிகளை அச்சுறுத்தியும், பலவந்தமாக ரயில் நிலையங்களில் வைத்து இறக்கியும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகிறது. வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து கொழும்புக்குச் செல்லும் ரயில் வண்டிகளில் ஏராளமான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த ரயில் வண்டிகளில் பயணம் செய்யும் தமிழ், முஸ்லிம் பயணிகளிடம் துப்பாக்கிகள், குண்டுகள் போன்ற ஆபத்தான பொருட்கள் இருப்பதாகத் தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், தாங்கள் குற்றத் தடுப்புப் பணியகப் பொலிசார் என்றும் கூறிப்பயணிகளிடம் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளது. பணம், நகைகள் உட்பட ஏனைய பெறுமதி வாய்ந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளமை பயணிகள் பொலிஸ் நிலையங்களில் செய்துள்ள முறைப்பாடுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மீரிகமை, வியாங்கொடை, மற்றும் கணேமுல்லப் பொலிஸ் நிலையங்களில் ரயில் பயணிகளினால் கொள்ளைகள் தொடர்பாக முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. பயணிகள் ரயிலில் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுவதற்காகப்பொலிசார் ஈடுபடுத்தப்படவில்லையென்று, பொலிஸ் அத்தியட்சகர் அறிவித்துள்ளார். இக்கொள்ளைக் கோஷ்டிகளிடம் யாரும் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்றும், எப்போதும் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாடல்களை மிகுந்த சத்தமாக ஒலி பரப்புவதால் அசௌகரியம்

மல்லாவிப் பிரதேசத்தில் ஐஸ்கிறீம் விற்பனையாளர்கள் தங்கள் வாகனங்களில் பாடல்களை ஒலிபெருக்கி மூலம் பலமாக ஒலிபெருக்கிச் சென்று வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் வீதிகளில் செல்லும் வாகனங்களின் சத்தம் கேட்காமல் செல்வதால் வீதியால் செல்லும் பாதசாரிகள் விபத்துக்குள்ளாகி வருகின்றனர். இது மட்டுமின்றி மல்லாவி பிரதான சந்தை நுழை வாசல்களிலும் பாடல்களை ஒலிபெருக்கி ஐஸ்கிறீம் வியாபாரத்தை மேற்கொள்வதாலும் சிலர் விபத்துக்குள்ளாகி வருகின்றனர். மேலும் பாடசாலை, அரசசெயலகங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் , மருத்துவமனையில் கடமைபுரிவோர்களும், நோயாளர்களும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் சம்பந்தப்பட்டவர்கள் பொதுமக்களின் நலன் கருதி ஒத்துழைப்பு நல்கும்படி மக்கள் கேட்கின்றனர். (24)

## கிளி.சுற்றுலா விடுதியில் நியாப் IIஅறிமுக நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

( நியாப்II) அறிமுக நிகழ்வு நாளை காலை 10.00 மணிக்கு கிளி. அரச செயலகத்திற்கு அருகாமையிலுள்ள சுற்றுலா விடுதியில் இடம் பெறவுள்ளது.அன்றையதினம் கிளிநொச்சி மாவட்ட சமூகஉணர்வூட்டல் பகுதியின் கீழ் கடமையாற்றிய அனைத்து சமூகஉணர்வூட்டாளர்களும் கலந்து சிறப்பிப்பதற்கான முன்னேற்பாட்டு கலந்துரையாடல் இடம் பெறவுள்ளதன் காரணத்தால் சமூக உணர்வூட்டாளர்களை இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக (நியாப் சமூக உணர்வூட்டல்) இணைப்பாளர் வேண்டியுள்ளார். (சோ.கு)

### மதிய உணவு வழங்கல்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் உள்ள அரச பாடசாலைகளில் மாணவர்களுக்கு மாலைநேரக் கல்வி புகட்டலுக்காக யுனிசெப் நிறுவன உதவியுடன் மதிய நேர உணவு வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் தரம் 2தொடக்கம் தரம் 11வரையான வகுப்பு மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்பட்டுவரும் வேளையில் முள்ளியவளைத் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 2தொடக்கம் தரம் 9வரையான வகுப்பு மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்பட்டுவருவதாகவும், இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மாலை நேரங்களில் சிறப்பாக அமைவதுடன் மாணவர்களிடையே ஒருவித உற்சாகத்தையும் அவதானிக்க முடிகின்றது என மேற்படி பாடசாலை அதிபர் சு.வீரசிங்கம் தெரிவித்துள்ளார். (ஆ)

## முல்லை மாவட்ட தே.எ.பேரவை சிறப்புற நடைபெற்ற சங்கமம்

முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு நேற்றுக் காலை 10.00 மணிக்கு முல்லை மாவட்ட தேசிய எழுச்சி செயலாளரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ச.கனகரத்தினம் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. பொதுச் சுடரை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேழினி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து முல்லை மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி, கடற்புலிகளின் முல்லை மாவட்ட பொறுப்பாளர் ரங்கன் அகியோர் உரையாற்ற சிறப்புரையை முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆற்றினார். இந்நிகழ்வில் பல்வேறுபட்ட விடயங்கள் ஆராயப்பட்டது. (08)

## நெல்லியடியில் நேற்று தே.எ.பேரவை மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாநாடு நேற்றுக் காலை 10.00 மணியளவில் நெல்லியடி சிறிமுருகன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்விற்கான பொதுச் சுடரினை மாவீரர் மேஜர் றோமின் தந்தையாரும் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் கணபதிப்பிள்ளை, கரும்புலி மாவீரர் சத்தியாவின் தாயார் புஸ்பமலர், வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா ஆகியோரும் ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியினை யாழ். மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றி வைத்தார்.

ஈகச் சுடர்களை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர்களான கலைவாணன், கானகன், செழியன், அன்பழகன் ஆகியோரும் ஏற்றி வைத்தனர்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், சிவநேசன், ரவிராஜ் ,யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, சர்வதேசமாணவர் அமைப்புப் பேரவைத் தலைவர் பகீரதன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினார்கள். (36)

**-பனங்காமம் பகுதியில்-**

## வெடி பொருள் எச்சரிக்கைக்காக இடப்படும் கம்பிகள் அபகரிப்பு

பனங்காமம் பிரதேசத்தில் வெடிபொருட்கள் குறித்து எச்சரிக்கை செய்து அமைக்கப்பட்டு வரும் வேலிகளை திருடர்கள் அபகரித்து வருகின்றனர்.இப்பிரதேசத்தின் வீரபிராயங்குளம் பகுதியில் கண்ணி வெடிகள், மிதிவெடிகள் இருந்து வருவதால் அதற்கான குறியீடுகள், கண்ணி வெடி அகற்றும் பிரிவினரால் போடப்பட்டிருந்தன. அக் குறியீட்டுக் கம்பிகள், வேலிகளையே திருடர்கள் அபகரித்து வருகின்றனர்.இங்கு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் இது தெரியாத மக்கள் காட்டுப் பகுதிக்குச் சென்றால் இராணுவத்தினரால் ஏற்கனவே புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள், மிதிவெடிகள் வெடிக்கும் அபாயம் ஏற்படலாம் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (24)

## திருகோணமலையில் இருதினங்கள் நடைபெற்ற முன்பள்ளிக் கண்காட்சி நிகழ்வில்...







# தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த அமெரிக்கா மேலும் உதவ முடியும்

## இன்ரர் போல் செயலாளர் நாயகம் கூறுகிறார்

**அமெரிக்கா சர்வதேச பொலிசாருடன் ஒத்துழைத்து வந்துள்ள போதிலும், வெளிநாடுகளில் செயற்படுகின்ற தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த மேலும் உதவ முடியுமென உலக பொலிஸ் அமைப்பான இன்ரர்போல் தெரிவித்துள்ளது.அமெரிக்கா மீது 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்த ஆணைக் குழு கடந்த வாரம் வெளியிட்ட இறுதி அறிக்கையில் இதற்கு கவனம் செலுத்தவில்லையென இன்ரர் பொலிஸ் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.**

இதற்குப் பதிலாக உள் நாட்டில் பாதுகாப்புத் தொடர்பான மாற்றங்களைச்செய்ய நடவடிக்கை எடுக்கப் படவேண்டுமென தெரிவிக்கப்பட்டிருப்பதாயும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தாக்குதல்களைக் கட்டுப் படுத்துவது, சர்வதேச நிறுவனங்கள் அல்லது அமெரிக்க சட்ட அமுலாக்க அமைப்புக்கள் என்ற வகையில் செயற்பட முடியும் என்பது குறித்து இவ்அறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லையென இன்ரர் போலின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவில் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய ஒவ்வொரு கேந்திர நிலையத்தைச் சுற்றியும் கோட்டைகளை அமைப்பது மடத்தனமான செயலென அவர் வர்ணித்துள்ளார்.



அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொலின் பவல் ஈராக்கிய சனாதிபதி கஸி அல்ஜவார் அருகிருக்க தலைநகர் பாக்தாத்திலுள்ள அரச தலைமையகத்தில் பத்திரிகையாளர்கள் மத்தியிலே உரையாற்றுகின்றார்.

### கியூபாவில் சிறைவைக்கப்பட்டுள்ள

# ஆப்கான், ஈராக் கைதிகளை விசாரிக்க அமெ.பிரிட்டன் நீதிமன்றம் அமைப்பு

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போரின் போது கைது செய்யப்பட்டு கியூபாவில் சிறைவைக்கப்பட்டுள்ள போர்க் கைதிகளிடம் விசாரணை நடத்துவதற்காக இங்கிலாந்து மற்றும் அமெரிக்க நாடுகள் நடுவர் நீதிமன்றத்தை அமைத்துள்ளன.

இதன் மூலம் அப்பாவிக் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படுவார்களென கூறப்படுகிறது. ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் நாடுகளின் மீது போர் தொடுத்த அமெரிக்கா அங்கு தீவிரவாதிகளுக்கு உதவியதாகக் கூறி சுமார் 600 பேரைப் போர்க்கைதிகளாக சிறைப்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்களில் அதிகமானோர் கியூபாவிலுள்ள குவாண்டாமோ வளைகுடாவிலுள்ள சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர். இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாக விசாரணை இன்றி வைக்கப்பட்டுள்ள இவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டுமென மனிதவுரிமை அமைப்புக்கள் கோரியுள்ளன. அத்துடன் இவர்களில் அதிகமானோர் அப்பாவிகள் எனத் தெரிவித்துள்ளதுடன் உடனடியாக அவர்களை விடுதலை செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கியூபாவில் சிறைவைக்கப்பட்டுள்ள போர்க் கைதிகளிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக இங்கிலாந்து மற்றும் அமெரிக்க நாடுகள் நடுவர் நீதிமன்[illegible] அமைத்துள்ளன. இ[illegible] மாதத்திற்குள் [illegible]களிடம் [illegible]ணைகளை மேற்கொண்டு மேல் நடவடிக்கை எடுக்குமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்திய பணயக் கைதியை விடுவிப்பதற்கான காலக்கெடு இன்றுவரை நீடிப்பு

இந்திய பணயக் கைதிகளில் ஒருவரை நேற்று இரவு கொன்று விடுவதாக கூறிய ஈராக்கிய தீவிரவாதிகள் காலக்கெடுவை இன்று வரை நீடித்துள்ளார்கள்.

இதனை ஈராக்கிலுள்ள ஏ.எம்.பி செய்தி நிறுவனத்திற்கு அனுப்பிய அறிக்கையில் கூறியுள்ளனர்.

பணயக் கைதிகளைக் காப்பாற்றுவதற்காக அவர்களது நாடுகளுக்கும், அவர்கள் பணி புரியும் குவைத் நிறுவனத்திற்கும் கடைசி வாய்ப்புத் தருவதாகக் காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தீவிரவாதிகள் கூறியுள்ளனர். மேலும் தம்முடன் பேச்சுவார்த்தை நடத்தும் [illegible]தியஸ்தர் ஷேக் கியாமி கேட்டுக் கொண்டதற்காகவே காலக்கெடு நீடித்துள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். இதேவேளை பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் விரைந்து எடுத்துத் வருவதாக ஈராக்கிலுள்ள குவைத் நிறுவனம் கூறியுள்ளது.

### -பாதுகாப்பு அணுசக்தி தொழில்நுட்பம்-

# இந்தியாவுடன் ஒத்துழைப்பை மேம்படுத்த பல்கேரியா விருப்பம்

இந்தியாவுடன் பாதுகாப்பு அணுசக்தி, தகவல் தொழில் நுட்பம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்ள பல்கேரியா முனைப்பாகவுள்ளது. இருதரப்பு வர்த்தகத்தை ஊக்குவிக்கவும் ஏராளமான வாய்ப்புக்கள் இருப்பதாக பல்கேரிய நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் சாலவன் கருத்துக் கூறியுள்ளார். புதுடில்லியில் தனது மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு பல்கேரியா பயணமாவதற்கு முன்னர் வானொலிக்கு பேட்டியளிக்கையில் அவர் இவ்வாறு நேற்று முன்தினம் கூறியுள்ளார். வளர்ந்துவரும் தொழில் நுட்பமான மாசு கட்டுப்பாட்டில் கூட இந்தியாவின் அனுபவத்திலிருந்து பல்கேரியா நிறையக் கற்றுக்கொள்ளவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

### -அமெரிக்கா நியுயோர்க்கில்-

# சீக்கியத்தலைப்பாகை, தாடியுடன் பொலிஸ் பணியைத் தொடர அனுமதி

(நியூயோர்க்)

அமெரிக்காவில் சீக்கியர் தலைப்பாகையை அகற்ற மறுத்ததால், வேலை இழந்த 2 பொலிஸ் அதிகாரிகளுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நியுயோர்க் நகரில் பொலிஸ் அதிகாரிகளாக 2சீக்கியர்கள் வேலை பார்த்தனர். ஜஸ்ஜீத் சிங் ஜக்கி, அம்ரிக் சிங் ரதோர் ஆகிய அந்த 2பேரும், சீக்கியர்கள் அணியும் தலைப்பாகை மற்றும் தாடியுடன் வேலைக்கு வந்தனர். அப்போது உயர் அதிகாரிகள்

அவர்களைத் தடுத்து தலைப்பாகையையும், தாடியையும் அகற்றிவிட்டு வேலைக்கு வரும்படி உத்தரவிட்டனர். ஆனால் அவர்கள் தலைப்பாகையையும், தாடியையும் அகற்ற மறுத்து விட்டனர். இதனால் அவர்கள் வேலையில் இருந்து விலகும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்.

இதை எதிர்த்து மனித உரிமைக் குழுவில் ஜக்கி புகார் செய்தார். ரதோர் மன்ஹாட்டன் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். ரதோர் வழக்கு விசாரணையில் இருக்கும் நிலையில், மனிதஉரிமைக் கமிஷன் விசாரணை நடத்தி, சீக்கிய அதிகாரிகளை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அவர்களின் மத சுதந்திரத்தில் தலையிடக் கூடாது என்றும் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து வேலை இழந்த 2 சீக்கிய அதிகாரிகளும் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். எனினும் "மனித உரிமைக் கமிஷன் உத்தரவை எதிர்த்து கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட இருக்கிறது" என்று நியூயோர்க் பொலிசார் கூறினர்.

# பாக்.பிரதமராகப் பதவி ஏற்கவுள்ள சவுகத்அஜிசைக் கொல்லமுயற்சி

### -தற்கொலைத் தாக்குதலில் 7 பேர் பலி, 25 பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமராக பதவி ஏற்க இருக்கும் சவுகத்அஜிசைக் கொல்ல நடந்த முயற்சியில் 7 பேர் பலியாகினர்.



உஸ்பெக்கிஸ்தான்-ரஸ்கென்றில் வழக்கறிஞரின் அலுவலகத்தில் தற்கொலைக் குண்டுதாரிகள் தாக்குதல் நடாத்தியதை விசாரணை செய்யும் உஸ்பெக்கிஸ்தான் நிபுணர்கள். இத்தாக்குதலில் அமெரிக்க இஸ்ரேலிய தூதரகங்கள் ஸ்தம்பிதம் அடைந்தன.

பாகிஸ்தானில் பிரதமராக இருந்த ஜமாலி; அதிபர் முஷாரப் உடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகப் பதவி விலகினார். இதைத தொடர்ந்து புதிய பிரதமராக சவுகத் அஜிஸ் தேர்ந்து எடுக்கப்பட்டார். இவர் தற்போது நிதி மந்திரியாக இருக்கிறார். பாகிஸ்தான் நாட்டின் அரசியல் சட்டப்படி பிரதமராகப் பதவி ஏற்க இருப்பவர்கள் தேசிய சட்டசபை உறுப்பினராக இருக்க வேண்டும் சவுகத்அஜிஸ் தற்போது மேல்-சபை உறுப்பினராக இருக்கிறார். எனவே அவர் தேசிய சட்டசபை உறுப்பினராக 'அட்டோக்' தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுகிறார். இந்தத் தொகுதியில் வருகிற 18ஆம் திகதி தேர்தல் நடக்க இருக்கிறது. நேற்று முன்தினம் சகவுத் அஜிஸ் தனது தொகுதியில் உள்ள பதேஜங என்ற நகரில் தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டுத் தனது காரில் ஏற நடந்து வந்தார். அப் போது திடீர் என்று தற்கொலைப் படையினர் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினார்கள். இதில் சவுகத் அஜிசின் கார் டிரைவர் உடல் சிதறிப் பலியானார். சவுகத்அஜிஸ் காயமின்றி உயிர் தப்பினார். இந்த வெடிகுண்டுத் தாக்குதலில் மொத்தம் 7 பேர் பலியாகினர். 25 பேர் காயம அடைந்தனர். பிரதமராகப் பதவி ஏற்க இருக்கும் சவுகத் அஜிஸ பத்திரமாக இருப்பதாகப் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் பொதுச் செயலாளர் உசேன் செய்யது தெரிவித்தார். இதே பிரசாரக் கூட்டத்தில் பேசி விட்டு வந்த பாகிஸ்தான் சிட்டி வங்கி முன்னாள தலைவரையும் கொல்ல முயற்சி நடந்தது. வெடிகுண்டு வீச்சில் அவர் உயிர் தப்பினார். நேற்றுமுனதினம் நடந்த இந்தத் தற்கொலைப் படைத்தாக்குதலுக்கு எந்தத் தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.



அமெரிக்காவின் சனநாயகக் கட்சி சனாதிபதி வேட்பாளர் செனட்டர் ஜோன் ஹெரி (வலது) ஸ்கிரான் ரொனில் பிரபல நடிகர் 'பென் அவ்ளெக்.' குடன் கைகுலுக்குகின்றார்.



தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தப்பள்ளிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் விஜயம் ஒன்றினை மேற்கொண்டனர். கிளிநொச்சியில் அமைந்துள்ள மேற்படி சீர்திருத்தப் பள்ளியிலுள்ள கைதிகளை நேரில் கண்டு அவர்களுடன் கலந்துரையாடி அவர்களது குறை நிறைகளை கேட்டறிந்தனர். (படம் : சோ, கு)

## வைத்திய ஒழுங்கு கோவைக்கு முரணாக விளம்பரம் குறித்து வவுனியாவில் விசாரணை

வைத்திய ஒழுங்கு கோவைக்கு முரணாக வவுனியாவில் இடம் பெறும் விளம்பரங்கள் தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா விசேட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு வவுனியா மாவட்ட நீதவான் எம் இளஞ்செழியன் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார். வவுனியாவில் இயங்கி வருகின்ற தனியார் ஒளிபரப்பு நிறுவனம் ஒன்று சட்டத்திற்கு விரோதமான முறையில் வைத்தியர்கள், தனியார் வைத்தியசாலைகள், தனியார் கிளினிக்குகள், தொடர்பாக விளம்பரம் செய்து வருகின்றமை தொடர்பாக வவுனியா நீதிமன்றில் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அத்துடன் நீதிமன்றின் அவதானிப்பின் பின்னர் அந்த நிறுவனத்தின் வைத்தியசாலைகள் தொடர்பான விளம்பரத்தின் ஆவணங்கள் நேற்று முன்தினம் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் மருத்துவ ஒழுக்கக் கோவைக்கு முரணான வகையில் தனியார் வைத்தியசாலையின் விளம்பரங்களை விளம்பரப்படுத்தியமை தொடர்பாக அந்த நிறுவனத்தின் பொறுப்பாளரிடம் விளக்கம் கோரி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (21)

### சீராக நடத்த ஆராய்வு

திருகோணமலைக்கும், மூதூருக்கும் இடையேயான கடல்வழி இயந்திரப்படகுச் சேவையை ஒழுங்காக நடத்தவும் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக்குறைக்கவும், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் காமினிரொட்ரிக்கோ தலைமையில் நடைபெற்ற படகுச்சேவை தொடர்பான மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது. (25)

# மன்னார் மாவட்டத்தில் கடும் வரட்சி நூற்றுக்கணக்கான விவசாயிகள் பாதிப்பு

### தற்போதைய நிலைமையையிட்டு ஆராய்வு

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் நிலவும் கடுமையான வரட்சியினால் நூற்றுக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. இந்நிலைமையையிட்டு இவ்வார நடுப்பகுதியில் ஆராயப்பட்டுள்ளது.**

முருங்கன் விவசாய உற்பத்தி மையத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மேற்படி அவரச சந்திப்பில் விவசாயக் குடும்பங்களின் நெருக்கடிகளைப் போக்குவதற்கான சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இச்சந்திப்பில் பாதிப்புற்றோருக்கான உதவிகள் வழங்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டதாக விவசாய வட்டராங்கள் தெரிவிக்கின்றன.

பல ஏக்கர் நெல்வயல்கள் வரட்சியினால் அழிவடைந்துள்ளது. தமது பயிர்களிற்குக் காப்புறுதி செய்த விவசாயிகள் காப்பீட்டுத் தொகைக்கு விண்ணப்பித்தும் அவர்களிற்கான இழப்பீட்டுக்கான முழுத்தொகையும் வழங்கப்படவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த அராய்வுக்கூட்டத்தில் உதவி விவசாய ஆணையாளர் இவர்களின் காப்பீட்டுத் தொகையை சாதாராண தொகையை விட அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் கூறப் படுகின்றது.

இச்சந்திப்பின் போது வன்னி மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவநாதன் கிசோர், விநோகராதலிங்கம், கீதா பொன் கலன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வட்டக்கச்சி மகாவித்தியாலய பொன்விழாவையிட்டு சிரமதானம்

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற விருக்கும் பொன்விழாவை முன்னிட்டு சில வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகியுள்ளது.

தற்போது பொன்விழாவுக்கான வேலையாக பாடசாலைச் சுற்றாடல்கள், மைதானவளாகம் போன்றவை மாணவர்கள் பெற்றோர்களால் கிழமையில் 5 நாட்கள் சிரதமானப பணி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (21)

### அக்கராயன் பிரதேச அரசியல் துறையால்

## சமூகநலத்திட்டங்களை மேம்படுத்த வலய ரீதியாக குழுக்கள் அமைப்பு

(கிளிநொச்சி)

அக்கராயன் பிரதேச அரசியல் துறையினரால் மக்கள் மத்தியில் சமூக நலத்திட்டங்களை மேம்படுத்தும் வகையில் வலய ரீதியாக குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.இதனடிப்படையில் கண்ணகைபுரம் மேற்கு-முட்கொம்பன் வலயத்தில் கல்விக்குழு, பெண்கள் மேம்பாட்டுக்குழு, சுகாதாரக்குழு, விளையாட்டுக்குழு என்பன அமைக்கப்பட்டுள்ளன. கல்விக்குழுவிற்கு சு. ஜெயகாந்தனும், பெண்கள் மேம் பாட்டுக்குழு-சுகாதாரக்குழுவிற்கு ஜீ.உதயராணியும், விளையாட்டுக்குழுவிற்கு சேகரும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (

## இருசுகாதார திணைக்கள அலுவலகங்கள் கட்டும் நடவடிக்கைகள் துரிதம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் இரண்டு சுகாதாரத் திணைக்கள அலுவலகங்கள் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனை ஆகிய இரு திணைக்களங்கள் அமைப்பதற்கான அத்திவாரங்கள் இடுவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத் திணைக்களங்கள் கட்டட வேலைகள் முடிக்கப்பட வேண்டி இருப்பதால் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாகப் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி. ஜெயக்குலராஜா தெரிவித்தார். (20)

### வைரவர் புளியங்குளம் பகுதியில்

## களவெடுக்க முயன்றவர் சிப்பாயெனச் சந்தேகம்

(செட்டிகுளம்)

கடந்த புதன்கிழமை இரவு வவுனியா வைரவர் புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் களவு எடுக்கச் சென்றவர் இராணுவச் சிப்பாயாக இருக்கலாம் என்று வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். களவெடுக்கச் சென்ற சமயம் வந்த நபரால் கைவிடப்பட்டுச் சென்ற இராணுவ அடையாள அட்டை வீட்டின் உரிமையாளரால் கண்டெடுக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வீட்டில் அனைவரும் நித்திரையாக இருந்த போது களவு எடுக்க ஒருவர் முயற்சித்ததாகவும், அப்போது திடீரென்று வீட்டிலிருந்த ஒருவர் நித்திரை விட்டு விழித்துப் பார்த்த போது கள்ளன் இருப்பதை கண்டு சத்தம் போட அந்த நபர் தப்பித்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. அண்மை நாட்களாக வவுனியாவில் களவு தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே பல மாதங்களாக வவுனியா மக்களிடையே பெரும் பரபரப்பினை ஏற்படுத்தி வந்த களவுச் சம்பவங்கள் குறைந்து இருந்தமையும், தற்போது மீண்டும் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (21)

## தடை செய்யப்பட்ட கூசிழிவுப் படம் பார்த்த இருவருக்கு நீதிமன்றத்தால் தண்டனை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ திரைப்பட தணிக்கை சட்டத்தின் பிரிவு 10 இன் கீழ் 6.8 பிரிவின் படி தடைசெய்யப்பட்ட கூசிழிவுப்படம் பார்த்தார்கள் என்ற குற்றத்தின் கீழ் இருவருக்கு கிளி.மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 19 திகதி கிளி.நகரப்பகுதியில் வைத்து தடை. செய்யப்பட்டிருந்த கூசிழிவுப் படம் பார்த்தார்கள் என்ற குற்றத்திற்காக கிளி.காவல் பணிமனையினரால் கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கிளி. மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கை விசாரணை செய்த கிளி. மாவட்ட நீதிமன்றம் தமிழீழ திரைப்பட தணிக்கை சட்டத்தின் கீழ்தடை செய்யப்பட்டிருந்த கூசிழிவுப்படம் பார்த்தார்கள் என்ற குற்றத்தின் கீழ் இவர்கள் இருவரும் குற்றவாளிகள் என தீர்ப்பளித்துள்ளது.

இவ்வாறு குற்றவாளிகளாக தீர்ப்பு வழங்கப்பட்ட இவர்கள் இருவரும் மேற்படி படம் பார்த்தமைக்கான குற்றத்திற்காக தண்டமாக தலா 5000ரூபா செலுத்துமாறும், தலா இரண்டு மாத சிறைத் தண்டனையையும் விதித்து கிளி. மாவட்ட நீதிமன்ற நீதிபதி செல்வி சாதனா கடந்த வியாழக்கிழமை தீர்ப்பளித்துள்ளார். (லோ,தீ)

### மடு கல்வி வலயத்திற்குட்பட்ட

## பாடசாலைகளின் சிறுவர் அரங்க நிகழ்வில் வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

மன்னார் மாவட்ட மடு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் அரங்கு நிகழ்வுகள் மன்/ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்கத் தமிழக்கலவன் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் வெகுசிறப்பாக நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை மடுவலயக் கல்விப் பணிப்பாளர் ஏற்றிவைத்தார். மடுவலயக்கொடியினை பிரதிக்கல்விப்பணிப்பாளர் கொ.யேசுதாசன் ஏற்றிவைத்தார், மடு கோட்டக் கொடியை மடுக்கோட்டத்தைச் சேர்ந்த கி.றாஜகோன் ஏற்றினார். மாந்தை மேற்குக் கோட்டக் கொடியினை மாந்தை மேற்குக் கோட்டத்தைச் சேர்ந்த மு. எமிலியான் பிள்ளை ஏற்றிவைத்தார். தொடர்ந்து மங்கல விளக்கேற்றப் பட்டது.

தொடர்ந்து மடுவலயக்கல்விப் பணிப்பாளர் எ.ஜ.குருஸ் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது கோட்ட மட்டத்தில் 36 பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்டு 12 பாடசாலைகள் வலயமட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது. இவற்றில் வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை மாகாண மட்டப்போட்டிக்காக தெரிவு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை மடு. வலயக்கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் திருமதி கொன்சி தாசீசியஸ் நிகழ்த்தினர், ஆசி உரையை வட்டக்கண்டல் சித்திவிநாயகர் ஆலயக்குருக்கள் நிகழ்த்தினார். பிரதமவிருந்தினர் உரையை யுனிசெப் நிறுவன வவுனியா திட்ட அதிகாரி திருமதி. ராதிகா சிவகுமாரன் நிகழ்த்தினார். ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி. சே.அருளாநந்தம் அவர்களின் நன்றி உரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றது. (லோ.தீ)

### 72பேர் தெரிவு

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குகின்ற திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் 72 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (மி)

# இராணுவத் தீர்விற்கும்— சமாதான வழிமுறைக்கும் இடையில் வேறு பாதை எதுவுமில்லை!

"கிழக்கில் நடைபெறும் பிரச்சினைகள் பூதாகரமானதாக மாறும் முன்னர் அவற்றைத் தீர்த்துக் கொள்ளுதல் அவசியமானதாகும். போர் நிறுத்த உடன்படிக்கை என்பது நடந்த யுத்தத்தை முடக்கி வைப்பதே ஒழிய அது இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டவில்லை என்பதை இலங்கை மக்கள் பலர் மறந்துவிட்டார்கள். இதுவரை முடங்கிக் கிடந்த யுத்தம் தற்பொழுது கொஞ்சம் கொஞ்சமாகச் சிலிர்த்து வருகின்றது"

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர்

விதார் கெல்கேசன்

☐ ☐ ☐

"மீண்டும் யுத்தத்திற்குச் செல்லும் நோக்கம் அரசுக்கில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் அதே நிலைப்பாட்டிலேயே உள்ளது. ஆகையினால், மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும் சாத்தியம் இல்லை என உறுதியாகக் கூறுகின்றேன்.

நாடு யுத்தத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் கூறியிருப்பது உண்மையான கள நிலையை மிகைப்படுத்தியதாகும். அவரது அந்தக் கூற்றை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்"

அமைச்சரவைப் பேச்சாளரும்,
அமைச்சருமான

மங்கள சமரவீர.

☐ ☐ ☐



இந்நிலையில், தற்பொழுதுள்ள கேள்வியானது இவர்களில் யார் சொல்வது சரியானது என்பதே ஆகும். அதாவது, நாடு யுத்தத்தை நோக்கிச் செல்கின்றதா? சமாதானப் பேச்சுவார்த்தைகளை நோக்கிச் செல்கின்றதா? என்பதில் எது சரியானது என்பதே ஆகும்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகளில் ஏற்றுச் சலிப்புற்று, அதிருப்தியுற்றும் போயுள்ளார் என்பதை அவர் இலங்கைக்கான விஜயத்தை ஆரம்பிக்கும் முன்னர் வெளியிட்ட கருத்துக்களே வெளிப்படுத்துபவையாக இருந்தன.

கொழும்பு புறப்படும் முன்பாக ரொய்ட்டர் செய்திஸ்தாபனத்திற்குப் பேட்டியளித்த அவர், "இலங்கையில் தற்பொழுது அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தத் தவறினால், தளம்பல் நிலை அடைந்திருக்கும் யுத்த நிறுத்த உடன்படிக்கை முறிவடைந்துவிடும் எனத் தெரிவித்தாரோடு, "சில சக்திகள் நெருப்போடு விளையாடுவது தெரிகின்றது. இது மிகவும் ஆபத்தானது" எனவும் எச்சரித்திருந்தார்.

அத்தோடு, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் இத்தகையதொரு நிலைப்பாட்டுடன் கொழும்பு வந்தபோதும், இந்நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் ஏற்படத்தக்கதான சூழ்நிலை மாற்றம் எதுவும் இங்கும் இடம்பெற்றதாக இல்லை. சுருக்கமாகக் கூறுவதானால், சமாதான முயற்சிகளில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படுவதற்கான மாற்றம் எதுவும் காணப்படவில்லை. சிறப்பாகக் கூறுவதானால், அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் மாற்றம் எதையும் கொண்டதாக இருக்கவில்லை.

அது மட்டுமல்லாது, அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முட்டுக்கட்டையாகவுள்ள தடைகள் எதையும் நீக்கவில்லை. வேறுவிதமாகக் கூறுவதானால், அதனை நீக்க முடியவில்லை என்றுகூடக் கூறலாம். அதாவது, ஆட்சி அதிகாரத்திற்கு வந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாததொரு நிலையிலேயே அது இருந்தது.

அடுத்ததாக, அரசாங்கத் தரப்பில்கூட இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒருமித்த கருத்து நிலவுவதாக இல்லை. விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கும், அதிகாரப் பரவலாக்கல் செய்வதற்கும் எதிரான சக்திகளும் ஆளும் தரப்பிலேயே உள்ளனர். இதனை அவர்களின் அறிவிப்புக்களே வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

இந்த வகையில், "நாட்டின் நன்மை கருதி புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைகளை அரசாங்கம் முழுமையாக ஏற்றுக் கொள்ளாதுவிட்டாலும் அது குறித்த ஆகக் கூடுதலான விட்டுக் கொடுப்புடன் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராக உள்ளது" என அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்புச் செய்து சில மணி நேரத்திற்குள்ளேயே.

"விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினால், அடுத்த கணமே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை விட்டு ஜே.வி.பி. வெளியேறும்" என அதன் பிரசார செயலர் விமல் வீரவன்ச அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

இத்தகையதொரு நிலையில், சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான உறுதியானதொரு நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியாதவராக உள்ளார் என்றே கொள்ளலாம். சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு விரும்புகின்றாரோ இல்லையோ அவர் ஒப்புக்காகினும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டிய நிலையில் இருந்து வருகிறார். ஆனால், நடைமுறையில் அது சாத்தியமற்றதாக வேயுள்ளது.

இதேவேளை, மறுபுறத்தில், யுத்த நிறுத்த உடன்பாடு தனது ஸ்திரத்தன்மையை இழக்கும் வகையிலான நிகழ்வுகள் அதிகரிக்கத் தொடங்கின. இதனால், களச் சூழ்நிலையையே விரைவில் மாற்றம் காணத் தொடங்கியது. கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக, மட்டக்களப்பில் மிகவும் பதற்றமானதொரு சூழ்நிலை வளர்ச்சி கண்டு வருகின்றது. மக்கள் யுத்த சூழ்நிலை ஒன்றிற்குள் வாழ்வது போன்றதொரு நிலையே காணப்படுவதாய் உள்ளது.

இதேசமயம், கொழும்பிலும் சில தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இத்



மங்கள சமரவீர

தாக்குதல் சம்பவங்களுக்கு யார் பொறுப்பு என்பது ஒருபுறம் இருக்க, இச்சம்பவங்கள் யுத்தச் சூழ்நிலை ஒன்று உருவாவதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. அதாவது, கெல்கேசன் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போன்று முடங்கிக் கிடந்த யுத்தம் கொஞ்சம் கொஞ்சமாகச் சிலிர்க்கத் தொடங்கியுள்ளது எனலாம்.

இதேசமயம், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ ஒரு பார்வையாளர் போன்றதொரு நிலைக்குத் தள்ளப்பட்டது. யுத்த நிறுத்த உடன்பாட்டையோ அன்றி கண்காணிப்பாளர்களினாலோ கள நிலையில் ஏற்பட்ட மாற்றத்தினைத் தடுத்து நிறுத்தவோ அன்றி அவை குறித்து உறுதியான நிலைப்பாட்டையோ மேற்கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது.

இந்நிலையில்தான் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் யுத்த நிறுத்தத்தின் உறுதியற்ற தன்மை வளர்ச்சி கண்டு செல்வதையும், சமாதானப் பேச்சுவார்த்தைக்கான பேச்சின் முன்னேற்றம் காணப்படாமையையும் அடிப்படையாகக் கொண்டு, நாடு யுத்தத்தை நோக்கிச் செல்வதாக எச்சரிக்கை செய்தார்.

அத்தோடு, தனது எச்சரிக்கைக்கான அடிப்படையும் அவர் வெளியிடாமல் இல்லை. "ஓர் இராணுவத் தீர்விற்கும், சமாதான வழிமுறைக்கும் இடைப்பட்ட பாதை என்பது இல்லை" என அவர் தெரிவிக்கின்றார். அதாவது, சமாதான முயற்சிகள் தோற்றுப்போகும் அன்றி முன்னேற்றம் காணாதவிடத்து யுத்தம் என்பது தவிர்க்க முடியாது என்பதே அவரது விளக்கமாகும்.

ஆனால், விதார் கெல்கேசனின் எச்சரிக்கை ஐ.ம.சு. முன்னணியின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரும், அமைச்சரவைப் பேச்சாளருமான மங்கள சமரவீர நிராகரிக்கின்றார். அரசாங்கமும், புலிகளும் யுத்தத்திற்குச் செல்லத் தயாராக இல்லை என அவர் தெரிவிக்கின்றார்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் கூற்றுக்களில் ஒருபகுதி ஏன் முழுப் பகுதி கூட உண்மையாக இருக்கலாம். அதாவது, விடுதலைப்புலிகள் யுத்தம் ஒன்றிற்குச் செல்ல விரும்பவில்லை என்பது உண்மையே. இதனை விடுதலைப்புலிகள் பல தடவைகள் பல தரப்பினரிமும் தெரிவித்தும் உள்ளனர். ஆனால், கெல்கேசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளது போன்று சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படாது போனால் யுத்த நிறுத்தம் ஸ்திரத்தன்மை இழக்கும் ஆபத்து உண்டு என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதொன்றே.

இதனை அண்மைய சம்பவங்களே உணர்த்தப் போதுமானவையாகவுள்ளன. அதாவது, இன்று அதிகரித்துவரும் பதற்றமானதொரு சூழ்நிலையிலும் இடம்பெறும் வன்முறைகளும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறாத பட்சத்தில், அவை யுத்தத்தை நோக்கி விரைந்து செல்வதாகவே இருக்கும்.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டிய தேவையும், நிர்ப்பந்தமும் அரசாங்கத்திற்கு இருக்கலாம். அதாவது, அரசாங்கம் சந்திக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவர பேச்சுவார்த்தைகள் தேவையானதாக இருக்கலாம். ஆனால், அரசியல் சூழ்நிலை என்பது அவ்வாறானதாக இல்லை.

ஜே.வி.பி.யின் அச்சுறுத்தலையும் மீறி சனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேச்சுக்களை நடத்துவதனால் யுத்த நிறுத்த உடன்பாடு சந்திக்கும் அச்சுறுத்தலானது குறைவடையலாம். ஆனால், அது ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்திற்கு ஆபத்தனதாகிவிடக் கூடியதாகும். அதாவது, ஜே.வி.பி. கூறியவாறு செயற்படுமானால், இவ் அரசாங்கம் கவிழ்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இந்நிலையில், தற்போதைய சூழ்நிலை தொடருமானால், அதாவது, சமாதான முயற்சிகள் முன்னெடுக்காததொரு நிலை தொடருமானால், யுத்த நிறுத்த உடன்பாடு ஸ்திரத்தன்மை இழப்பதும் மீண்டும் யுத்தம் தொடர்வதும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

அத்தோடு, சமாதான முயற்சிகளில் தீவிர பங்காற்றிய விதார் கெல்கேசன் போன்ற முக்கிய பிரமுகர்கள் யுத்தத்தைப் பற்றிப் பேசுவதும், எச்சரிப்பதும் என்பது நிலைமை கட்டு மீறிச் சென்று கொண்டிருப்பதாக அவர்கள் கருதத் தொடங்கியதன் விளைவே ஆகும். ஆனால், அமைச்சர் மங்கள சமரவீர இதற்கு மறுப்புத் தெரிவித்தமை காரணமாக கெல்கேசனின் கருத்துக்கள் தவறானவை ஆகிவிடமாட்டாது.

ஆனால், இது அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும் தெரியாததல்ல. ஆனால், கெல்கேசன் போன்ற சமாதான முயற்சிகளில் முக்கிய பங்காற்றிய ஒருவர் சமாதான முயற்சிகள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கின்றமை சிறிலங்கா அரசிற்கு விரும்பத்தக்கதாக இல்லை.


ஏனெனில், நாடு எதிர்நோக்கும் பெரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்குச் சர்வதேச நாடுகளின் உதவிகளை எதிர்பார்த்திருக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு கெல்கேசனின் இத்தகைய அறிவிப்புக்கள் பாதகமானதாகும். இந்நிலையில்தான் கெல்கேசன் நிலைமையை மிகைப்படுத்திக் கூறிவிட்டார் எனத் தெரிவிக்க வேண்டியதொரு நிலைமையை மங்கள சமரவீரவிற்கு உருவாக்கியது.

ஆனால், உண்மையில் தற்போதைய கள நிலையில் மாற்றம் காணப்பட வேண்டுமானால், அரசாங்கம் பல துணிவான காரியங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். அதில் முக்கியமானது புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது.

இதில், அரசாங்கம் வெற்றி பெறுவதைப் பொறுத்தே யுத்தமா? சமாதானமா? என்பது தீர்மானிக்கப்படுவதாக இருக்கும். இதேவேளை, ஜே.வி.பி. போன்ற கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியை நடாத்தும் அரசாங்கம் சமாதான முயற்சிகளுக்காகத் தனது ஆட்சி அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்க முனையுமா என்பதைப் 'பொறுத்தே யுத்தமா? சமாதானமா? என்பது' தீர்மானிக்கப்படும்.

இதில், பேச்சுவார்த்தைக்கான இணக்கப்பாடு ஒன்று ஏற்படாதுபோனால், விதார் கெல்கேசன் குறிப்பிட்டதுபோல் சமாதானத்திற்கும் - யுத்தத்திற்கும் இடையில் ஒரு வழி இல்லை என்ற நிலையில் யுத்தம் தவிர்க்க முடியாதாகிவிடும்.

-ஜெயராஜ்



சிபுசோரன்

# குற்றவாளிகளை இனங்காட்டும்

# அரசியல் பழிவாங்கல்கள்

அ.கலைவாணி

இந்திய மத்தியமைச்சரவையில் இருந்து நிலக்கரி மற்றும் சுரங்கத் தொழில் அமைச்சர் சிபுசோரன் தனது பதவியிலிருந்து அண்மையில் விலகியுள்ளார். சிபுசோரன் மனம் விரும்பித் தனது பதவியைவிட்டு விலகவில்லை. கொலைக் குற்றச்சாட்டில் தொடர்புடையவர் என்று எதிர்க்கட்சிகளின் கோஷத்தினால் அவர் தனது பதவியைத் துறக்கவேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டார். அதாவது பதவியிலிருந்து விலகல் எனும் பெயரில் எதிர்க்கட்சியினரின் கைங்கரியத்தால் சிபுசோரனின் பதவி பறிக்கப்பட்டுள்ளது என்றுதான் கூறவேண்டும்.

சிபுசோரனின் பதவி பறிக்கப்பட்டதை யடுத்து எதிர்க்கட்சியான தேசிய சனநாயகக் கூட்டணி ஆனந்தக் கூத்தாடினாலும் காரியத்திலும் கண் வைக்காமல் இல்லை. அதாவது சிபுசோரன் போலவே ஊழல் மற்றும் கிரிமினல் குற்றச்சாட்டுடையவர்களான லல்லுப்பிரசாத் யாதேவ் உள்ளிட்டவர்களும் பதவியிலிருந்து தூக்கப்படவேண்டும் என்பதில் கனகச்சிதமாக செயல்படுகின்றது.

மக்களவைத் தேர்தலில் தோல்விகண்ட பாரதிய ஜனதா கூட்டணி, எதிர்க்கட்சி வரிசைக்கு தள்ளப்பட்டதும், ஓய்ந்துவிடவில்லை. காங்கிரசின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை எந்தெந்த வழிகளில் நிம்மதியை குலைக்க முடியுமோ அவ்வாறெல்லாம் செயற்படுவது என்று கங்கணம் கட்டிவிட்டதோ.. என்பது போலதான் அதன் செயற்பாடுகள் காட்டிநிற்கின்றன.

அந்தவகையில் சோனியா பிரதமராகக் கூடாது என்பதுதான் எதிர்க்கட்சியின் முதற் கோஷமாக இருந்தது. சோனியாகாந்தி எதிர்ப்பையும் மீறி பதவியேற்க முற்படுவார். அதனால் மாநில ரீதியாக நாடு தழுவலாக போராட்டங்களை முன்னெடுத்து, சோனியாகாந்திக்கு நெருக்கடிகளை கொடுக்க வேண்டும் என்றுதான் பாரதிய ஜனதாவின் திட்டமாக இருந்தது.

ஆனால் தடாலடியாக சோனியாகாந்தி மன்மோகன் சிங்கை பிரதமராக்கிவிட்டார். இதனால் ஏற்கனவே திட்டமிட்ட தமது நடவடிக்கைகளை முடக்கிக்கொண்ட எதிர்க்கட்சியினர் அடுத்து மத்தியரசை எந்த வகையில் திணறடிக்க முடியும் என்று ஓடி ஓடிக்காரணம் தேடினர்.

அதுதான் ஊழல் மற்றும் கிரிமினல் குற்றச்சாட்டுடையவர்கள் மத்தியரசில் அங்கம் வகிக்கக் கூடாது என்பதாகும். அது, எங்களுக்குச் சிக்கலல்ல. நாட்டிற்கே சிக்கல் என்று விளக்கமும் கூற முனைந்துள்ளது பாரதிய ஜனதா கூட்டணி.

தொடர்ச்சியாக மக்களவை மாநிலங்களவையைப் புறக்கணிப்பு கோஷமெழுப்பல், சபாநாயகரை முற்றுகையிடல்... என்று தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தினர்.

இவற்றின் மொத்த வடிவ எதிரொலிப்புதான் சிபுசோரன் தனது பதவியிலிருந்து விலகி இருப்பதாகும்.

சிபுசோரனை கைது செய்ய ஜார்க்கண்ட் பொலிசார் புதுடில்லி விரைந்துவரக் காரணம் இல்லாமலில்லை.

அதனால் தான் ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் பதவிவிலக வேண்டும் என்று போராட்டம் நடத்த ஆரம்பித்துள்ளனர். ஏனெனில் பாரதிய ஜனதாவின் மாநில முதலமைச்சர் அர்ஜன்முண்டி தான் பதவி ஏற்றதும் தன் மீது இருந்த வழக்குகளை ரத்துச்செய்துவிட்டார். சிபுசோரன் மீதான வழக்கை நிலுவையில் வைத்துள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் பாரதிய ஜனதாவின் கூட்டணிக் கட்சிதான் ஆட்சியிலுள்ளது. எனவே அங்கு நடந்துள்ள 29 வருடகாலத்திற்கு முந்தைய கொலை வழக்கை தற்போது தூசுதட்டி எடுத்துக் கொண்டுள்ளது இக்கூட்டணிக் கட்சி.

ஆனால் மிக துரிதமாக காய் நகர்த்தப்பட்டிருப்பதுதான் ஆச்சரியப்படவைக்கிறது. இல்லையேல் காங்கிரசின் கூட்டணி அரசு பதவியேற்று இரண்டு மாதகாலம் பூர்த்தியாகாத நிலையில் மத்தியமைச்சரவையில் இருந்து ஒருவர் பதவி தூக்கப்படுவது என்பது அதாவது எதிர்க்கட்சிகளின் தொல்லை தாங்காது பதவியை விட்டு கண்காணாது ஓட்டம் எடுத்துள்ளார் என்பது வியப்பை ஏற்படுத்தாமல் இல்லை. இதற்கு ஜார்க்கண்ட் மாநிலத்தில் பாரதிய ஜனதா கூட்டணியின் அரசாட்சிதான் காரணமன்றி வேறில்லை.



அத்வானி

1975இற்கு முன்னர் ஜார்க்கண்டில் நடந்த படுகொலை வழக்குத் தான் இன்று சிபுசோரனை விரட்ட ஆரம்பிக்கின்றது. 1975 இற்கு முன்னர் பீஹாரின் ஒரு பகுதியே ஜார்க்கண்ட் ஆக இருந்தது.

இதனால் முத்தி மோட்ஷா கட்சியினர் ஜார்க்கண்ட் தனி மாநிலமாக பிரகடனப் படுத்தப்பட வேண்டுமென்று போராட்டம் நடத்தினர்.

இதன் போது முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதியில் கலவரம் ஏற்பட்டதில் 10 பேர் கொல்லப்பட்டனர். இந்தக் கொலை "சிருப்படுகொலை" என்று கூறப்பட்டது. இந்தப்படுகொலையில் 69பேர் சம்பந்தப்பட்டதாக வழக்குத் தொடரப்பட்டது. அதில் ஒருவர் சிபுசோரன்.

ஆனால் இந்த 69 பேரில் தற்போது 25பேர் மரணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சிபுசோரன் மீது கைதாணை பிறப்பிக்கப்பட்டது அரசியல் பழிவாங்கலே என்பது முத்தி மோட்ஷா கட்சியினரின் வாதம்.

உண்மையில் 29வருடமாக ஜார்க் கண்ட் மாநிலத்தில் இந்த வழக்கு நிலுவையில் தான் இருந்து வந்துள்ளது.

தற்போது எதிர்க்கட்சியான தேசிய சனநாயகக் கூட்டணியினர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள சிபுசோரன் வழக்கை கிளறியெடுத்து ஜார்க்கண்ட் நீதிமன் றத்தை கைது ஆணை பிறப்பிக்கவும் வைத்துள்ளனர்.

இதனால்தான் கடந்த 29 வருடகாலமாக நிலுவையிலுள்ள வழக்கில் சிபுசோரனை தற்போது கைதுசெய்ய ஜார்க்கண்ட் பொலிஸார் புதுடில்லி விரைந்தனர் என்றால் எதிர்க்கட்சியினரின் செயற்பட்ட வேகம் குறித்து ஆச்சரியப்படாமல் இருக்கமுடியாதது தான்.

இதேவேளை சிபுசோரனின் பதவி விலகலும் தலைமறைவையும் அடுத்து எதிர்க்கட்சியினர் திருப்தி அடைவார்களா என்றால் அது சாத்தியமில்லை என்பது போலதான் அவர்களது செய்கைகள் அமைந்துள்ளன.

இந்த வகையில் லல்லுபிரசாத் யாதேவ் உள்ளிட்ட ஏனைய ஆறுபேரும் சிபுசோரன் போலவே பதவி விலக வேண்டும். அதுவரை இரு அவைகளிலும் எதிர்க்கட்சியினர் வெளிநடப்பே மேற்கொள்ளவுள்ளனர் என்று தீர்மானம் நிறைவேற்றியதுடன் கூட்டத்தொடர் கூடும் போது அமளியிலும் ஈடுபடுபவர்கள் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.



லல்லுபிரசாத்

இதேவேளை கடந்த கூட்டத்தொடரில் எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டதால் எதிர்வரும் ஆகஸ்ட் நடுப்பகுதிவரை இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதிலிருந்து எதிர்க்கட்சியினரின் அமளியின் தராதரத்தையும் புரிந்துகொள்ளவும் முடியும்.

அதாவது ஒரேகல்லில் பல மாங்காய் விழுத்துவதுதான் பாரதிய ஜனதாவின் திட்டம். சிபுசோரன் கொலை வழக்கில் தண்டனை பெற்றால்... பாரதிய ஜனதாவின் குறிதவறாத கல் லல்லுப்பிரசாத் உள்ளிட்டவர்களையும் தாக்க முற்படும் என்றும் நம்பலாம்.

அதற்கிடையே ஜார்க்கண்ட் மாநில நீதிமன்றம் சிபுசோரனுக்கு பிணை மனுவை வழங்குமானால் எதிர்க்கட்சியினரின் திட்டங்கள் தவிடு பொடியாகவும் கூடும்.



வாஜ்பாய்

ஆனால் ஜார்க்கண்ட் மாநிலத்தில் பாரதிய ஜனதாவின் செல்வாக்கே இருப்பதனால் பிணை மனுவை நீதிமன்றம் சிபுசோரனுக்கு வழங்க முன்வருமா..... என்பது கேள்விக்குறியே ஏனெனில் இந்திய நீதித்துறையில் அரசியல் தலையீடு என்பது புதியதொன்றல்ல.

எதிர்க்கட்சியினரின் இத்தகைய நடவடிக்கைகள் மத்தியரசிற்குச் சிக்கலை ஏற்படுத்தாமல் இல்லை.

இதன் வெளிப்பாடே பிரதமர் மன்மோகன்சிங் எதிர்க்கட்சியினர் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டிருப்பதாகும்.

ஆனால் ஊழல் கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மத்தியமைச்சரவையிலிருந்து விலக்கப்படவேண்டும் அதுவரை இரு அவைகளிலும் எதிர்க்கட்சியினர் சட்டத் தொடரை புறக்கணிக்கப் போவதாகவே சபதமிட்டுள்ளனர். அதாவது இரு அவைகளிலும் இவர்களது அமளியைப் பார்க்கும் மக்கள் இவர்களையா... எமது பிரதிநிதியாக்கினோம் என்று கவலைபட வைக்கப்போவது போலவே தான் நடந்து கொள்கின்றனர்.

ஆனால் இதன் மறுபக்கமும் இருக்கின்றது. நாணயத்திற்கு இரண்டு பக்கம் இருப்பது போல் ஆளும் கட்சியினரில் பல்லைப்பிடித்துப் பார்க்கும் எதிர்க்கட்சியினர் தமது பக்கத்தை ஏனோ பார்க்கத் தவறிவிட்டனர். தவறிவிட்டனரா அல்லது அது எமக்கு பொருந்தாது எனும் பிடிவாதமா என்றும் தெரியவில்லை.

சிபுசோரன் நீதிமன்றம் மூலம் தண்டனை பெறுவாரானால் மத்தியரசும், எதிர்க்கட்சியினர் மீது நிலுவையில் இருக்கும் வழக்குகளைத் தோண்டி எடுக்காது விடமாட்டார்கள் என்றும் எதிர்பார்க்க முடியும்.

அந்த வகையில் அத்வானி, உள்ளிட்டோர் மீது அயோத்தி வழக்கு நிலுவையில் இருக்கின்றது. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது கார்கில்போரில் சவப்பெட்டி வாங்கியதில் ஊழல் வழக்கு நிலுவையில் இருக்கின்றது.

இவ்வாறு எதிர்க்கட்சியினர் மீதான நிலுவை வழக்குகளும் ஆளும் கட்சியினர் கையில் எடுக்கப்படலாம். நீதிமன்றங்களில் மிகுந்த பரபரப்பும் ஏற்படக்கூடும்.

எனவே நாட்டின் அபிவிருத்திக்குப் பாடுபடவேண்டிய மக்கள் பிரதிநிதிகள் தமக்குள்ளேயே குடுமிப்பிடி பிடிப்பதை இந்திய மக்கள் எவ்வாறு ஜீரணித்துக் கொள்ளப் போகிறார்கள்....... என்பதுதான் கவலைதரும் வினாவாகும்.

# பேச்சுவார்த்தை குறித்த சந்திரிகாவின் அறிவிப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி கொடுத்த வரவேற்பு

இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணும் முயற்சிகள் தொடர்பான விடயத்தில் தென்பகுதி அரசியல் கட்சிகள் தமது சித்துவிளையாட்டுகளை மீண்டும் ஆரம்பித்துவிட்டன. கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்த சமாதான ஏற்பாட்டாளரும் நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சருமான விதார் ஹெல்கேசன் கடுமையான எச்சரிக்கைத் தொனியில் யுத்தம் மூளும் அபாயம் குறித்த கூற்றுக்களும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்த விருப்பம் தெரிவித்ததையடுத்தும் தென்னிலங்கைக்கட்சிகள் சுறுசுறுப்படைந்துள்ளன.

இச்செய்தி வெளிவந்தவுடனேயே தேசாபிமானிகள் தமது காட்டமான எதிர்ப்பை வெளியிட்டனர். ஜே.வி.பி.யினர் அதி உச்சமாக அதனை வெளியிட்டனர். அதாவது, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால் அதுவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியின் இறுதியாக இருக்கும் என எச்சரித்தது. அது ஆட்சியின் இறுதியெனக் கூறினாலும் அது கட்சியின் இறுதி யென்பதும் வெளிப்படை.

ஜே.வி.பி.யின் இந்த அறிவிப்பானது இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் அது ஒருபோதும் எந்த இணக்கப்பாட்டிற்கும் வரப்போவதில்லை என்பதை வெளிப்படுத்தியது.

இப்பொழுது நகர முடியாது நிற்கும் பேச்சுவார்த்தையை எவ்வாறாயினும் நகரச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வே அனுசரணையாளர்களுக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவு அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்திருப்பதானது அவரது பூரண விருப்பத்திற்குரியதாக நிச்சயம் இருந்திராது. ஆனால், தற்போதைய இறுக்கமான சூழலைத் தளர்த்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு வேறு வழியில்லை என்பதே உண்மையாகும்.



ஆனால், ஆட்சியைத் தக்கவைக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திறந்த வழி ஜே.வி.பி.யின் கூற்றினால் அதற்கு எதிரான விளைவை தந்திருக்கிறது. அதாவது, பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் அரசாங்கத்தை ஜே.வி.பி. கவிழ்த்துவிடும் என்ற நிலையினை ஏற்படுத்தியிருக்கிறது.

பேச்சுவார்த்தை விடயத்தில் முற்றிலும் மாறுபாடான நிலைப்பாட்டில் உள்ள ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேரும்போதே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறான விளைவை எதிர்பார்த்திருக்கவே வேண்டும். ஆனால், அன்றும் இன்றும் இவ்விடயத்தில் ஜே.வி.பி.யைச் சமாளித்துவிட முடியும் என்றே, சனாதிபதி சந்திரிகா எண்ணி வருகிறார். இது சாத்தியமானால், அது ஒரு திருப்பு முனையாகவே அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ் இழுபறியால் ஐக்கிய தேசிய கட்சி வெளியிட்டுள்ள பகிரங்க அறிவிப்பானது பலருக்கு ஆச்சரியம் அளிப்பதாக இருக்கலாம். அதாவது, இவ்விடயத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஆதரவளிக்கத் தயார் என ஐ.தே.க. அறிவித்திருக்கிறது. ஜே.வி.பி.யை விட இரண்டு பங்கு பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துள்ள அக்கட்சி ஜே.வி.பி.யினர் இவ்விடயத்தில் முரண்பட்டு ஆட்சியைவிட்டு வெளியேறினாலும் அரசாங்கத்திற்குத் தமது கட்சி ஆதரவளிக்கும் எனத் தெரிவிக்கிறது.

அதேவேளை அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எண்ணம் தமக்கில்லை எனக்கூறும் அக்கட்சி 2005 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சனாதிபதித்தேர்தலே தனது குறி என்றும் கூறுகின்றது.



அதுவரை அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தப் போவதாகவும் கூறுகிறது.

அமைச்சரவையில் திணைக்களப் பொறுப்புகளுக்கு ஜே.வி.பி.யும், சு.க.வும் இன்றும் இழுபறிபட்டுக்கொண்டிருக் கின்றன. விவசாயத்துறையிலுள்ள சில திணைக்களங்கள் தொடர்பில் தொடரும் இழுபறி மீண்டும் சூடான வார்த்தைப் பிரயோகங்களுக்கு இடமளித்திருக்கிறது. இவ்வாறு அடிக்கடி ஆட்சிக் கவிழ்ப்புப்பற்றியும் இருகட்சிகளுக்குமிடை யேயான நல்லிணக்க ஒப்பந்த மீறல் குறித்தும் குற்றம் சாட்டிக் கொண்டு ஜே.வி.பி. இருக்க ஐ.தே.க.வின் ஒத்துழைப்பு அறிவிப்பின் நோக்கம் என்ன? என்றகேள்வியும் எழுகின்றது.

உண்மையிலேயே நாட்டின் நன்மைகருதி ஐக்கிய தேசியக் கட்சி இவ் ஒத்துழைப்புக்கு முன்வருகிறதா? என்ற கேள்விக்கு சிறிலங்காவின் அரசியலை உன்னிப்பாகப் பார்க்கும் எவரும் உடனடியாக ஆம் என்று பதில் சொல்லி விட மாட்டார்கள்.

ஏனென்றால் அவ்வாறானதொரு நிகழ்வு சிறிலங்காவின் அரசியல் வரலாற்றிலே என்றும் நிகழ்ந்ததில்லை.

2001 ஆம் ஆண்டு டிசெம்பரில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்றபோது சமாதான முயற்சியொன்றிற்கு அது அத்திவாரமிட்டது. ஆனால் 2003 இறுதியில் அதன் சமாதான முயற்சிகள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக்கூறி சனாதிபதி சந்திரிகா ஆட்சியைப் பறிக்க அத்திவாரமிட்டார். மூன்று முக்கிய அமைச்சுகளைப் பறித்தார்.

அவ்வேளையில் ஐக்கியதேசிய முன்னணி புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்ட வரைவு அடிப்படையில் பேசுவதற்கு அது தயார் நிலையில் இருந்தது. ஆனால், இத்திட்டவரைவு இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவிப்பதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூறியது. இப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசு அதே இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாயின் (அது தொடரவேண்டுமென்ற கட்டாயம் ஐ.தே.கவுக்கு இல்லை) அது.ஐ.தே.கட்சிக்கு கிடைத்த வெற்றியாகவே அமையும். அதன் மூலம் தனது கடந்த ஆட்சிக் காலம் சரியான நகர்வுகளையே கொண்டிருந்தது என்பதையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கலைத்தது தவறு என்பதையும் நிரூபிக்க உதவும். அத்துடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகப் பேசுவது என்பது ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் தொடக்கிய பேச்சு வார்த்தைகளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொடர்வ தாகவே கொள்ளப்படத்தக்கதாகும். எனவேதான் இடைக் காலத்தன்னாட்சித் திட்டவரைபை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதை ஐ.தே.க. எப்பொழுதும் வரவேற்றுவருகிறது.

அடுத்ததாக இடைக்காலத் தன்னாட்சித் திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்தால் பெரும்பாலும் ஜே.வி.பி.- சு.க. ஒப்பந்தம் முறிவடையும். பின்னர் ஜே.வி.பியும், சு.க.வும் ஒன்றிணைய முடியாது. இதன் மூலம் சனாதிபதித் தேர்தலை இலகுவாக எதிர்கொள்ள முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி எதிர் பார்க்கின்றது. எனவே இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்படுமானால் அது தனக்கு நன்மையாகவே முடியும் என எதிர்பார்க்கிறது.



இந்நிலையில் ஜாதிக ஹெல உறுமய வழமைபோலவே மறியல் நடத்தப் போவதாக மிரட்டுகிறது. ஜே.வி.பி.யுடன் ஒரு புறம் கழுத்துப்பிடியான முரண்பாடு நிலவுகையில் பேச்சுவார்த்தை எனவரும் போது ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் நாட்டுப்பற்றாளர்களாக மாறிவிடுகின்றனர். இனப்பிரச்சினைக்கு சமாதானவழி மூலம் தீர்வுகாணவிடாது அதனை முறியடிப்பதன் மூலம் தமது கட்சிகள் வளர்ச்சி யடைய முடியும் என நம்புகின்றனர்.

இவ்வாறு சிறிலங்காவின் அரசியல்வாதிகளின் சித்து விளையாட்டுகள் காட்டுகையில் இது குறித்தெல்லாம் புரிந்து கொள்ளாத நிலையில் தமிழ் மக்கள் இல்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் அவர்களுக்குப் பெரும் கற்பனைகளும் இல்லை. ஆனால் அவ்வாறான கற்பனையுள்ள சர்வதேச சமூகம் இதனை நேர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? □

வேலவன்

---

கசிப்புக் காய்ச்சியமை தொடர்பாக

## நான்கு முறை பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நபர் வவுனியா பொலிசாரினால் கைது

(செட்டிகுளம்)

நீண்ட நாட்களாக கசிப்புக் காய்ச்சி நான்கு முறை வவுனியா நீதிமன்றினால் திறந்த பிடிவிறாந்து விதிக்கப்பட்ட நபர் நேற்று முன்தினம் வசமாக மாட்டிக்கொண்டார். வவுனியா கற்பகபுரம் காட்டுப் பகுதியில் நீண்ட நாட்களாக கசிப்பு வடித்து வந்த நபர் வவுனியாப் பொலிசாரால் கைது செய்யப் பட் டுள்ளதாக மது போதை குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உடுல் சுந்தன தெரிவித்தார்.

மேற்படி நபருக்கு எதிராக வவுனியா நீதி மன்றில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருப்பதாகவும் நான்கு முறை இவருக்கு எதிராக திறந்த பிடிவிறாந்து நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்டு இருப்பதாகவும் எனினும் பொலிசார் கைது செய்ய செல்லும் போது அவர் தப்பித்து வந்ததாகவும், ஆனால் தற்போது முறையாக மாட்டிக்கொண்டார் என்றும் அவர் தெரிவித்தார். இவரிடம் இருந்து கசிப்புக் காய்ச்சுவதற்கு பயன் படுத்தப்படும் கோடா பரல் 07, கசிப்பு போத்தல் 64,உபகரணத் தொகுதி 02 என்பனவும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள் ளது.இதற்கு விசேட பொலிஸ் குழு அமைக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (21)

## புத்தர் சிலையை கடத்த முயன்ற முன்னாள் பௌத்த பிக்கு கைது

புத்தர் சிலையை கடத்த முற்பட்ட முன்னாள் பிக்கு உட்பட நால்வர் பொலிசாரால் கைது செய்யப்படடுள்ளனர்.கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த கடலதெனிய இடத்திலுள்ள விகாரையில் இருந்து புராதன புத்தர் சிலையை களவாடி கடத்த முற்பட்ட போதே குறித்த பிக்கு மற்றும் ஒரு பெண் உட்பட நால்வர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இப் பிக்கு முன்பொருமுறை ஊவா பரணகமவிலும், ஒரு புத்தர் சிலையைத் திருடி இருந்தார் என தெரிவிக்கும் பொலிசார் கைதான அனைவரும் ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

–வவுனியா, மன்னார், முல்லை மாவட்டங்களில் –

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரமின்றி 14,000 சிறுவர்கள் "அனுமானவயசு" திட்டத்தின் கீழ் பதிவுசெய்ய ஏற்பாடு

(செட்டிகுளம்)

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்கள் தமது பிள்ளைகளுக்கு உரிய முறையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பதியாததன் காரணமாக இன்று அந்தப் பிள்ளைகள் பெரும் சிரமத்திற்கு முகம் கொடுத்துவருவதாகத் தெரிவிக்கப் படுகிறது. இவ்வாறு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பதியப்படாத சுமார் 14ஆயிரம் சிறுவர்கள் இருப்பதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றது.

இவ்வாறு உள்ள சிறுவர்களைப் பாட சாலைகளில் சேர்ப்பதில் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. போர்காரணமாக இடப் பெயர்வுகள், போதிய அளவு வசதியின்மை, போன்ற காரணங்களால் அப் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரி விக்கப்படுகிறது. இவ்வாறு உள்ள சிறு வர்களினைப் பதிவதற்கு என்று "அனுமான வயசு" திட்டத்தின் கீழ் இந்த சிறுவர்களைப் பதிவுசெய்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(21)

# சமாதானத்தை முன்னெடுக்க அரசுக்கு ஆதரவு

# ஐ.தே.க.வின் அறிவிப்பால் அனுரா கலக்கம்

## -பிளவு ஏற்படாதெனவும் கூறுகிறார்

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளிற்கு ஜே.வி.பி எதிர்ப்புத்தெரிவிக்குமாயின் தாம் அரசுக்கு ஆதரவு வழங்கத்தயாராகவுள்ளோம் என ஐக்கிய தேசியக்கட்சி கூறியிருப்பதை வன்மையாக நிராகரிப்பதாக சிறிலங்காவின் கைத்தொழில் உல்லாசத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.**

அரசை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் உதவி எமக்குத் தேவையில்லை எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்குள் பிளவு வராதெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கூட்டமைப்பு அரசு தோன்றுவத்ற்கு அனுரா பண்டாரநாயக்க காரணமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக வர்த்தக மையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்:- கூட்டணி அரசு பாராளுமன்றத்தில் தனது. பெரும்பான்மை தொடர்பாக நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தேவையாயின் அதனை நிருபிக்க முடியுமென சூளுரைத்துள்ளார்.

இதேவேளை ஐ.ம.சு. முன்னணியின் முதலாவது வரவு செலவுத்திட்டம் இதனை நிருபிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமென மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாய்கள் தருவிப்பு

கைகுண்டுகள், போதை வஸ்துப் பாவனைகள் தற்பொழுது நாட்டில் அதிகரித்துள்ளபடியால் இவைகளை கண்டுபிடிப்பதற்கு 30 மோப்ப நாய்களை ஜேர்மனியிலிருந்து பொலிஸ் திணைக்களம் வரவழைத்துள்ளது.

# வேலைவாய்ப்பிற்காக இலங்கையரை ஈராக்கிற்கு அனுப்ப வேண்டாம்

## -சிறிலங்கா தொழில் அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

வேலைவாய்ப்பிற்காக இலங்கையர்களை ஈராக்கிற்கு அனுப்பவேண்டாமென வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை வழங்கும் முகவர் நிலையங்களுக்கு அறிவித்துள்ளதாக தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற முகவர் நிலையங்களுக்கு எதிராக தமது அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அண்மையில் ஈராக்கிலிருந்து நாடு திரும்பியவர்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# ஏழு மாகாணசபைகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர்கள் நியமனம்

(கொழும்பு)

ஏழு மாகாணசபைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி எதிர்க்கட்சித் தலைவர்களை நியமித்துள்ளது.

மேல்மாகாணசபைக்கு கித்சிறி கஹரப்பிட்டியவும், தென்மாகாண சபைக்கு ஜஸ்ரின் கலப்பதியும், வடமேல்மாகாண சபைக்கு அசோக வடிகமன்கவவும், சப்ரகமுவ மாகாணசபைக்கு ஏ.ஏ விஜயதுங்கவும், ஊவாமாகாண சபைக்கு உபாலி சமரவீரவும், மத்திய மாகாணசபைக்கு வசந்த அலுவிகாரவும், வடமத்திய மாகாணசபைக்கு ஆர்.பி.அபேயசிஸ்காவும் எதிர்க்கட்சித் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அனுமதியை ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கை வகுக்கும் குழு சென்ற வெள்ளி நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் வழங்கியிருந்தது.

# நிதியமைச்சர் கையெழுத்திடவில்லை

# பல மில்லியன் நாணயத் தாள்கள் அழிப்பு

நிதியமைச்சர் கையெழுத்திடாததால் மில்லியன் கணக்கான நாணயத்தாள்கள் அழிக்கப்பட்டன இது குறித்துத் தெரியவருவதாவது.

இருபது மில்லியன் ரூபாய்களுக்கும் அதிக பெறுமதியுடைய ஆயிரம், ஐநூறு, ஐம்பது மற்றும் பத்து ரூபா நாணயத்தாள்கள் இலங்கை மத்திய வங்கியினால் அச்சடிக்கப்பட்டு வணிக வங்கிகளுக்கு புழக்கத்திற்கு விடப்பட்ட நிலையில் நிதியமைச்சர் சரத் அமுனுகம ஐம்பது ரூபா நாணயத் தாள்களைத் தவிர ஏனையவற்றில் தான் கையெழுத்திடவில்லையென தெரிவித்ததை அடுத்து அதிர்ந்து போன மத்திய வங்கி அதிகாரிகள் மிக்க சிரமப்பட்டு நாணய விநியோகத்தை ஒருவாறு நிறுத்தினர்கள்.

பின் அந்நாணயத் தாள்கள் வங்கியால் அழிக்கப்பட்டதாக பெயர் குறிப்பிட விரும்பாத மத்திய வங்கி அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

# இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதே அரசின் குறிக்கோள்

## -பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரத் தீர்வுகாண்பதே குறிக்கோளாக உள்ளதாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ளார்.

கட்டுநாயக்காவிலுள்ள இராணுவ முகாமைப் பார்வையிட்ட பின்னர் இராணுவ அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை அரசாங்கம் எந்த நேரத்திலும் பேச்சுவார்த்தையை நடத்தத் தயாராக உள்ளதாகவும் அவர் கூறினார்.

# 50 இலட்சம் ரூபா நாணயத்தாள்களை சட்டவிரோதமாகக் கடத்தியவர் கைது

(கொழும்பு)

50 இலட்சம் ரூபா பெறுமதியான நாணயத்தாள்களை சட்ட விரோதமாக கட்டுநாயக்க விமான மூடாகக் கடத்திச் செல்ல முற்பட்ட ஒருவரை விமான நிலையப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவரின் பயணப் பொதியினுள் மிகவும் சூட்சுமமான முறையில் இந்த நாணயத்தாள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக அதிகாரிகள் கூறியுள்ளனர். கைப்பற்றப்பட்ட நாணயத்தாள்களில் யூரோ, அமெரிக்க டொலர், பிராங், மாலைதீவு ரூபாய், யப்பானியயென், இலங்கை நாணயத் தாள்கள் என்பனவும் இருந்துள்ளன. கைது செய்யப்பட்ட நபர் மாலைதீவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மதமாற்றத் தடைச்சட்டம் குறித்து ஹெல உறுமய மக்களுக்கு விளக்கம்

மதமாற்றச் சட்ட மூலத்திற்கு பல்வேறு தரப்பினரிடமிருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளதால் அதன் உண்மைத் தன்மையை மக்களுக்கு இனம் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் எல்லானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடிய போதே தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

# ஈராக்கிற்கு வேலைவாய்ப்புத்தேடி சென்றோர் இலங்கை திரும்பினர்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமொன்றால் ஈராக்கில் வேலைக்கென அனுப்பப்பட்ட இலங்கையர்கள் 29 பேர் இலங்கை திரும்பியுள்ளனர். ஈராக்கில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறிய முகவர் நிறுவனம் ஜோர்தான் ஊடாக இவர்களை ஈராக்கிற்குள் அனுப்ப முயற்சிகளைமேற் கொண்ட போதும் அது கைகூட வில்லை. இதனையடுத்து இவர்கள் அனைவரும் திருப்பிஅனுப்பப்பட்டுள்ளனர்.

(32)


வீரவணக்கம்

3ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



க.வசீகரன்

(தமிழீழத் தேசிய துணைப்படை வீரர்)

தாயக மண்ணில் 01.08.2001

01.08.2001 அன்று முள்ளிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான எதிர்பாராத மோதலின்போது வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி:-
கட்டைப்பறிச்சான்,
மூதூர், திருமலை.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையினர்"





# வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் மீள் குடியமர அனுமதிக்குமாறு வற்புறுத்து

## 400 குடும்பங்கள் அவல வாழ்வு

(யாழ்ப்பாணம்)

**வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள 400இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தம் சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாத நிலையில் பெரும் அவல வாழ்வை வாழ்ந்து வருகின்றனர்.**

கடந்த காலத்தில் மேற்படி பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த 400இற்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேர் பருத்தித்துறை, தும்பளை, கற்கோவளம், குடத்தனை போன்ற பகுதிகளிலுள்ள அடிப்படை வசதிகள் அற்ற அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இதனால் இவர்களின் சமூக, கல்வி,பொருளாதார நிலைமைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் பல வகை துன்பங்களை அனுபவித்துவருகின்றனர்.

இதனால் இம்மக்கள் தமது சொந்த இடங்களை ஆக்கிரமித்து வைத்துள்ள பாதுகாப்பு வலயங்களை அகற்றி தம்மை மீளக்குடியமர வழி செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.(33)

# கைவிடப்பட்ட கரையோர காவலரண்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பொற்பதிப் பகுதியில் படையினரால் கைவிடப்பட்ட காவலரண்கள் துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கடற்கரை ஓரமாக நிறுவப்பட்டிருந்த மேற்படி காவலரண்கள் அரசு-புலிகளுக்கிடையான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தொடர்ந்த அமைதிச் சூழ்நிலையில் கைவிடப்பட்டிருந்ததுடன், அப்பகுதிக்கடலில் தொழில் செய்ய செல்லும் தொழிலாளர்கள் மீது திணிக்கப்படும் அடாவடித்தனங்களும் சற்றுத் தளர்த்தப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த சில நாட்களாக-இவ்வாறு கைவிடப்பட்டிருந்த காவலரண்களைப் புனரமைத்து வரும் படையினர் கடற்தொழிலாளர்கள் மீதான பாஸ் மற்றும் சோதனைக் கெடுபிடிகளை யுத்த காலத்தில் இருந்தது போன்று தீவிரப்படுத்தியுள்ளனர். (33)

## நூல்கள் அன்பளிப்பு

சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் நடராஜாரவிராஜினால் பெருந்தொகையான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

பாராளுமன்ற விவாதம் அடங்கிய கோப்புக்கள், மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள் அடங்கிய நூல்கள், பொது அறிவு சம்பந்தமான புத்தகங்கள் மற்றும் அரசியல, பொருளியல், விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.(28)

# குற்றச் செயல்களைத் தடுக்க குடாநாட்டில் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம் பெறும் குற்றச்செயல்களை தடுப்பதற்கு கிராம சேவையாளர்கள் மற்றும் பிரதேச செயலர்களூடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக களவு, சட்டவிரோத மதுபாவனை, ஆட்கடத்தல், வழிப்பறி கொலை, கொள்ளைச் சம்பவங்கள் என்பன இடம் பெற்று வருகின்றன.

இவற்றால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதற்ற சூழ்நிலையை தவிர்ப்பதுடன் குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை இனம் கண்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக கிராமசேவகர்கள் மற்றும் பிரதேச செயலர்களூடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. (33)

# காரைநகர் கிராமிய வைத்தியசாலையில் நெருப்புக்காய்ச்சலால் பாதிப்புற்ற 50பேர் சிகிச்சை

## - யாழ். பல்கலைக்கழக மாணவர் உதவி



சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளோர்.

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதியில் அதிகரித்து வரும் நெருப்புக் காய்ச்சலால் அதிகமான மக்கள் பீடிக்கப்பட்டு காரைநகர் கிராமிய வைத்தியசாலையில் உள்ளனர்.சுமார் 50 இற்கு மேற்பட்ட நெருப்புக்காய்ச்சல நோயாளர்கள் மட்டும் இவ்வைத்தியசாலையில் உள்ளதால் அவர்களுக்குரிய படுக்கை வசதிகளும் மிகவும் குறைவாக உள்ளது. இதனால் வெளியில் படுக்கும் நிலை உள்ளது. யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் கடந்த செவ்வாயன்று வீடு வீடாகச் சென்று இளநீர்கள் சேகரித்துக் கொண்டு அவ் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களுக்கும் அப் பிரதேசத்தில் உள்ள நோயாளர்களுக்கும் வழங்கியதோடு அவர்களோடு கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனா.

இந் நெருப்புக்காய்ச்சல் நோயால அப்பிரதேசத்தில் அதிகமான சிறார்கள் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்நோய் இப்பிரதேசத்திற்கு திடீரென ஏன் பரவியது என வைத்திய நிபுணர்களை கேட்ட போது அப்பிரதேசத்தில் அண்மையில் சிவகாமி அம்மன் ஆலய திருவிழா நடைபெற்றது. அத்திருவிழாவின்போது அன்னதான உணவு சமைப்பதற்காக நீண்ட நாட்கள் பாவிக்கப்படாமல் இருந்த கிணறு ஒன்றினைச் சுத்தம் செய்து அந்த நீரைச் சமையலுக்குப் பயன்படுத்தினார்கள். அந்த நீரின் ஊடாகப் பரவி இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்தார்கள்.தீவக கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் மற்றும் சிறிகாந்தா ஆகியோர் அந்நோயாளர்களைப் பார்வையிட்டு கலந்துரையாடினர். (36)

## - அரசின் வேலைவாய்ப்புத் திட்டத்தில் -

# தென்மராட்சி பட்டதாரிகளும் புறக்கணிப்பு இன்று அவசரமாக கூடி ஆராய அழைப்பு

(தென்மராட்சி)

சிறிலங்கா அரசின் பாரபட்ச நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள தென்மராட்சி பட்டதாரிகள் அரசின் இப்பாரதூர நடவடிக்கையைக் கண்டித்து இன்று அவசர கூட்டத்தைக் கூட்டியுள்ளனர்.

மதியம் 1 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இக்கூட்டம் இடம்பெற இருக்கிறது. தற்பொழுது அரசினால் வெளியிடப்பட்ட பட்டதாரிகளுக்கான பெயர்ப்பட்டியலில் தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள 350 பட்டதாரிகளில் ஒருவரின் பெயரே வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தென்மராட்சி பகுதியில் உள்ள பட்டதாரிகள் நியமனங்களில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. அரசின் இப் புறக்கணிப்பு நடவடிக்கையைக் கண்டித்து அடுத்த கட்ட நகர்வு குறித்து ஆராயப் பட்டதாரிகள் சங்கம் முடிவெடுத்துள்ளது. இன்று நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு தமிழீழ அரசியல்துறையினர், பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மற்றும் அனைத்துப் பட்டதாரிகளும் கலந்துகொள்ள இருப்பதாகத் தெரியவருகிறது. இக் கூட்டத்தில் அரசின் இச்செயலைக் கண்டித்துப் போராட்டம் நடத்த முடிவு எடுக்கப்படும் எனத் தெரியவருகிறது. (28)

# இருபாலையில் வீதி நடுவே இரு மிதிவெடிகள் மீட்பு

(தென்மராட்சி)

வலிகாமம், இருபாலைப் பகுதியில் கடந்த இரண்டரை வருடங்களாக மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பாதையின் நடுவில் இருந்து வெடிக்கக்கூடிய நிலையில் இரு மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இப்பகுதி மக்களின் புழக்கம் நிறைந்த பாதையில் இருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டது. இப்பகுதியை உறைய வைத்திருக்கிறது. இந்த வெடிப்பொருளை கலோரெஸ்ட் மிதிவெடி அகற்றும் நிறுவனம் கண்டுபிடித்து அகற்றியுள்ளதாக தெரியவருகிறது. (28)


## சாவு அறிவித்தல்



அமரர் திரு.

வேலுப்பிள்ளை சுப்பையா

அவர்கள் மாத்தளையைப் பிறப்பிடமாகவும், இல.170, ஜெயபுரம் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 30.07.2004 அன்று இறைவனடி சேர்ந்தார்.

காலஞ்சென்ற சு. சுப்பம்மாவின் அன்புக்கணவரும், (கணபதி, தெய்வானை, தங்கவேல், நாகம்மா, நாகையா, அன்னபூரணம், இராஜகோபால், பெருமாள், முத்துலிங்கம்,கணேஸ்,பாலா, இராஜா, சறோஜா ) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01.08.2004 ஞாயிற்றுக் கிழமை பி.ப.4.00மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பல்லவராயன் கட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல், சு.இராஜா [மகன்]
இல.170, ஜெயபுரம்

(4647)

கிளி/கிளிநொச்சிமத்தியகல்லூரி
பழையமாணவர்சங்கம்

## பொதுக் கூட்டம்

மேற்படி எமது கல்லூரியானது பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் 15.08.2004ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் சகல பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்

(4866)

## வெற்றிடங்கள்

27 வருடங்களாக இயந்திர தயாரிப்பில் முன்னோடியாக விளங்கும் எமது ஸ்தாபனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

1. உருக்கிணைப்பாளர்கள் (Aic Welders & Tig Weldes)
02. பொருத்துனர்கள்
03. பப்ரிகேட்டர் (Fabricater)
04. தகட்டு வேலையாட்கள்

மேற்படி வெற்றிடங்களுக்கு சுயமாக சிந்தித்து செயற்படும் ஆற்றலுள்ள, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அனுபவமுள்ள தரமாக வேலை செய்வதில் ஆர்வமுள்ள தொழிலாளர்கள் தேவை.

கல்வித்தகைமை:- தேசிய தொழில் பயிலுனர்சபைச் சான்றிதழ்கள்/தேசிய தொழில் நுட்பக்கல்லூரி சான்றிதழ்கள் பெற்றிருந்தால் நலம்.

அனுபவம்:- குறைந்தது 5வருடங்கள்.

திறமைக் கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

மேற்படி வெற்றிடங்களுக்கு நற்சாட்சி விபரம் கோரக்கூடிய உறவினா அல்லாத இருவரின் பெயர் விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக இயக்குனர்,
புறோமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிடெட்,
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(சி.9765)

# ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி - 2004

## இறுதிப் போட்டிக்கு வந்து தோற்கும் அணியல்ல இந்தியா!



### அணித்தலைவர் கங்குலி

போட்டியின் இறுதிக்கு வந்து தோற்கும் அணியல்ல இந்தியா: கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு போட்டிகளில் இந்தியா கோப்பையை வென்றுள்ளது என்று இந்தியக் கிரிக்கெட் அணியின் கப்டன் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் 1-1 என்ற கணக்கில் இருந்தோம். இறுதியில் வென்றோம். அதேபோல் பாகிஸ்தானுக்கு எதிரான ஒருதினப் போட்டித் தொடரிலும் 2-2 என்ற சமநிலையில் இருந்து வெற்றி பெற்றுள்ளோம். நாட்-வெஸ்ட் போட்டியில் சாம்பியனானோம் என்று உதாரணம் கூறியுள்ளார் கங்குலி.

கங்குலி தலைமையில் 12 போட்டிகளில் இறுதிச் சுற்றில் இந்தியா விளையாடியுள்ளது. இதில் 9இல் தோல்வியடைந்தது. ஒருமுறைமட்டும் (நாட்-வெஸ்ட்) கோப்பையை வென்றது. 2 முறை மற்ற அணியுடன் கோப்பையை பகிர்ந்து கொண்டது. ஆனால் இந்த 9 தோல்விகளில் பொரும்பாலனவை அவுஸ்ரேலியாவுக்கு எதிரானவை.

ஆம்,அவுஸ்திரேலியா மிகவும் வலுவான அணி. முக்கிய போட்டிகளில் அவர்கள் மிகச் சிறப்பாக விளையாடி வருகின்றனர். ஆசியக்கோப்பை போட்டியின் இறுதியில் இந்தியா அது போன்ற ஆட்டத்தை வெளிப்படுத்தும் என்கிறார் கங்குலி.

ஆசியக்கோப்பை போட்டியின் இறுதி சற்று சவாலாகவே இருக்கும் சொந்த நாட்டில் இலங்கையை வீழ்த்துவது எளிதானதல்ல. மேலும் அனுபவமிக்க சமிந்தவாஸ் , முத்தையா முரளிதரன் விளையாடவுள்ளனர். மிகவும் வலுவானதாக இலங்கை உள்ளது.

ஆனால் இலங்கையுடன் இதற்கு முன்பும் விளையாடியுள்ளோம். வெற்றி பெற்றுள்ளோம். அதை மீண்டும் செய்ய ஆவலாக உள்ளோம் என்கிறார் கங்குலி.

## இந்தியாவுடனான போட்டியை எதிர் கொள்ளத் தயாராகவுள்ளோம்

### -சிறிலங்காவின் முன்னாள் கப்டன் ஜெயசூரிய



(கொழும்பு)

இந்தியாவுடனான ஆட்டத்தில் தீவிர போட்டி இருக்கும் என்றும் நாங்கள் அனைவரும் அதனை எதிர் கொள்ள தயாராகவுள்ளதாகவும் சிறிலங்கா அணியின் முன்னாள் தலைவர் சனத்ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இன்று கொழும்பில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டி தொடர்பாக பி.பி.ஸிக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை இந்திய அணி சிறந்த துடுப்பாட்ட வீரர்களை கொண்டதாக உள்ளது. குறிப்பாக சச்சின், கங்குலி, ராவிட், போன்றோர் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் ஆவார்கள்.

இதேவேளை இலங்கை பயிற்சியாளர் போன்டைசன் கருத்து தெரிவிக்கையில் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் தமது எதிர்பார்ப்புக்கு அமைய சிறிலங்கா வீரர்கள் விளையாடி வந்துள்ளதாகவும் ஆசிய வெற்றிக் கிண்ணத்தை வென்றெடுப்பதற்கு அவர்கள் பெரும் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் தெரிவித்தார்.




## ஜெயசூரியா விக்கெட்டை விரைவில் வீழ்த்த திட்டமிட்டுள்ளோம்!

### ராகுல் ராவிட் தெரிவிப்பு



"ஆசிய கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கை வீரர் ஜெயசூரியா விக்கெட்டை விரைவில் வீழ்த்த திட்டமிட்டு இருக்கின்றோம்" என்று ராகுல் ராவிட் கூறியுள்ளார். இறுதிப் போட்டி, ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடந்து வருகிறது. இதன் இறுதிப் போட்டி இன்று பகல்- இரவாக கொழும்பில் நடக்கிறது. இதில்"சூப்பர் லீக்" ஆட்ட முடிவில் இரண்டு இடங்களை பிடித்த இலங்கை-இந்தியா அணிகள் இறுதிப் போட்டியில் பலப் பரீட்சை நடத்துகின்றன.

இந்தப் போட்டிக்காக இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இவ் இறுதிப் போட்டி குறித்து இந்திய அணி துணை கப்டன் ராகுல் ராவிட் தெரிவிக்கையில் இலங்கை அணி வீரர் ஜெயசூரியா மிகச் சிறந்த பேட்ஸ்மன். இந்தியாவுக்கு எதிராக அவர் எப்போதும் சிறப்பாக விளையாடுவார். அவரது ஆட்டத்தைத் கட்டுப்படுத்த சில வியூகங்களை நாங்கள் வகுத்துள்ளோம். இலங்கை அணிக்கு நெருக்கடி அளித்து ஜெயசூரியாவின் விக்கெட்டை விரைவில் வீழ்த்த முடியும் என்று நம்புகிறோம்.

இலங்கைக்கு எதிரான இறுதிப் போட்டி பெரிதானதாகும். வீரர்கள் அனைவரும் இந்த ஆட்டத்துக்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். இது ஒரு சவாலான ஆட்டமாக இருக்கும். இலங்கை அணி தனது சொந்த மண்ணில் சிறப்பாக ஆடும். எனவே அந்த அணியுடன் மோதுவது சவாலானதாகும். அதே நேரத்தில் இந்திய அணி முழுத் திறனையும் காட்டி கடுமையாக போராடும். காயம் அடைந்த லட்சுமன் நல்ல நிலையில் உள்ளார். வலைப்பயிற்சியில் ஈடுபட்ட அவருக்கு உடல் தகுதி முன்னேற்றம் கண்டு வருகிறது. போட்டிக்கு முன்பு சிறப்பான நிலையை எட்டி விடுவார் எனவும் ராவிட் கூறினார்.

### ஏ.டி.பி.டெனிஸ் போட்டி

## 4 ரஷ்ய வீராங்கனைகள் கால் இறுதிக்குத் தெரிவு

அகுரா கிளாசிக் ஏ.டி.பி. டெனிஸ் போட்டி அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் விம்பிள்டன் சம்பியன் ஷரவோவா (ரஷ்யா) 6-0,6-1 என்ற நேர்செட்டில் ஆர்ஜன்டீனா வீராங்கனை ஜிசெலா டுல்கோவை தோற்கடித்து கால் இறுதிக்கு முன்னேறினார்.

ரஷ்யாவை சேர்ந்த அனஸ் டாசியா மெஸ்கினா, எலினா டெமென்டிவா, வெரா சொனெ ராவா ஆகியோரும் கால் இறுதிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நொக்கவுட் முறையில் டைசன் அதிர்ச்சித் தோல்வி

அமெரிக்காவில் நடைபெற்ற அதிபாரக் குத்துச்சண்டைப் போட்டியில் முன்னாள் உலக சம்பியன் மைக்கல்டைசன் நொக்கவுட் முறையில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

இரும்பு மனிதன் என்று அழைக்கப்படும் குத்துச் சண்டை வீரர் மைக்கல்டைசனுக்கும் பிரித்தானிய முன்னாள் சம்பியன் டானி வில்லியம்ஸிற்கும் இடையேயான பன்னிரண்டாவது சுற்று தெரிவு குத்துச் சண்டைப் போட்டி அமெரிக்காவில் நேற்று நடைபெற்றது.ஒரு வருடத்திற்கு பின்பு மைக்கல் டைசன் களம் இறங்கிய இப் போட்டி உலக குத்துச்சண்டை ரசிகர்கள் இடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அமெரிக்காவின் லெளஸ்வில்லில் நடை பெற்ற இப் போட்டியில் முதற் சுற்றில் டைசன் ஆதிக்கம் செலுத்தினார். இருப்பினும் அடுத்த இரண்டு சுற்றிலும் டைசனை கண் மூடித்தனமாகத் தாக்கிய வில்லியம் நான்காவது சுற்றில் அவரை நொக்கவுட் முறையில் வீழ்த்தி வெற்றி பெற்றார். டைசன் நொக் கவுட் முறையில் தோல்வியடைந்திருப்பது உலக குத்துச் சண்டை ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



13.லெளஸ்வில்லில் நடந்த அதிபாரக் குத்துச் சண்டைப் போட்டியொன்றில் பிரிட்டனின் டானி வில்லியம்ஸ்' மைக்கல்டைசன் மீது முஷ்டியால் குத்துகிறார். இப்போட்டியில் 'நொக்கவுட்' மூலம் வில்லியம்ஸ் மைக்கல்டைசனைத் தோற்கடித்தார்.

## ஜிடேன் தற்போதைக்கு ஓய்வு பெற மாட்டார்

பிரான்ஸ் கால்பந்து அணிக் கப்டன் ஜினெடின் ஜிடேன் தற்போதைக்கு ஓய்வு பெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்று அணியின் புதிய பயிற்றுநர் டோமனட்ச் தெரிவித்துள்ளார். 32 வயதாகும் ஜிடேன், 92 சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ளார். ரியல் மாட்ரிட் அணிக்காகவும் விளையாடி வருகிறார். விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதற்கான எந்தத் தகவலும் அவரிடமிருந்து வரவில்லை என்றார் டோமனட்ச். கால்பந்து போட்டியிலிருந்து ஜிடேன் ஓய்வு பெறுவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி பிரெஞ்ச் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

## பால்தாக்கரே— மியாண்டாட் சந்திப்பு!



(மும்பாய்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஜாவிட் மியாண்டாட் சிவசேனக் கட்சித் தலைவர் பால்தாக்கரேயை மும்பாயில் சந்தித்துப் பேசினார்.

மும்பாய் வந்திருந்த மியாண்டாட்பால் தாக்கரே வீட்டில் சென்று அவரைச் சந்தித்தார். இந்திய அணியின் முன்னாள் கப்டன் வென்சாகரும் உடன் இருந்தார்.

இந்தியா- பாகிஸ்தான்.அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் பால்தாக்கரேயை மியாண்டாட் சந்தித்தமை அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது.

இச்சந்திப்புக் குறித்து நிருபர்களிடம் பேசிய பால்தாக்கரே கிரிக்கெட் வீரர் என்ற ரீதியில் ஜாவிட்டை எனக்குப் பிடிக்கும். 1986 ஆம் ஆண்டு சேதான் சர்மா வீசிய கடைசிப் பந்தை சிக்சர் அடித்து பாகிஸ்தானுக்கு கோப்பையை பெற்றுக்கொடுத்தவர் என்றார்.

ஜாவிட் மியாண்டாட் கூறுகையில் பால் தாக்கரே கிரிக்கெட்டை நேசிக்கிறார். இது மாதிரியான சந்திப்பு இரு நாடுகள் இடையிலான உறவை மேலும் வளர்க்க உதவும் என நம்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

## பயஸ்–மகேஷ் சோடி ஒலிம்பிக்கில் பங்கேற்பு

கிரீஸ் நாட்டின் தலைநகர் எதென்சில் ஒகஸ்ட் 13ஆம் திகதி தொடங்கி 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில், டென்னிஸ் ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் இந்தியா சார்பில் லியாண்டர் பெயஸ்-மகேஷ்பூபதி சோடி பங்கேற்கிறது. சமீபகாலமாக லியாண்டா பெயஸ், டேவிட் ரீகிலுடனும்(செக்குடியரசு) மகேஷ்பூபதி, மாஸ்மிர்னியுடனும் (பெலாரஸ்) இணைந்து டென்னிஸ் போட்டியில் விளையாடி வருகின்றனர்.

ஒலிம்பிக் போட்டிக்கு தயாராக உலகின் முன்னாள் முதல் நிலை சோடியான லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி மீண்டும் இணைந்து இரட்டையர் ஆட்டத்தில் பங்கேற்கிறார்கள். கனடா நாட்டில் உள்ள டொராண்டோவில் நடந்து வரும் ஏ.டி.பி.மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் லியாண்டர் பெயஸ்-மகேஷ்பூபதி சோடி ஆடிவருகிறது. இப்போட்டியில் மூன்றாவது சுற்றிற்கு முன்னேறியுள்ள இச்சோடியின் ஆட்டம் சிறப்பாகியுள்ளது. இந்த இணை சிறந்த பழைய நிலைக்குத் திரும்பி இருப்பதாகக் கூறப்படுகிறது.

## புதுக்குடியிருப்பு ம.வி. மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு

(புதுக்குடியிருப்பு)



வடக்கு கிழக்கு மாகாண மட்டத்திலான திறனாய்வுப் போட்டி கடந்த 24ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரையும் திருகோணமலையில் உள்ள மக்சீசர் விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இப்போட்டியில் பங்குபற்றிய புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய மாணவனான ச. நிறஞ்சன் (19வயது ஆண்கள் பிரிவில்) என்பவர் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இவர் 400 மீற்றரை 52 செக்கனில் ஓடிமுடித்தும் உள்ளார். அத்துடன் இவர் தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவருக்கு கல்விச் சமூக மட்டத்திலும், மக்கள் மத்தியிலும் பாராட்டுதல்கள் கிடைத்துள்ளன.

மேலும் பா.பிரதீப், கி. அகிலகிரி, மனோகரன் ஆகியோரும் தேசிய மட்டப் போட்டிக்கு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலிருந்து தெரிவாகியுள்ளனர். மாகாண மட்டத்தின் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட ச. நிறஞ்சன் என்பவரையே படத்தில் காண்கிறீர்கள்.

## சிந்தனைக்கு



சமாதானத்தை நான் ஆத்மபூர்வமாக விரும்புகிறேன். எனது மக்கள் நிம்மதியாக, சமாதானமாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டும் என்பதே எனது ஆன்மீக இலட்சியம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 01-08-2004

மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## தீர்மானிக்க வேண்டியது ஜே.வி.பி.யே!

வடக்கு–கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில், பேச்சுவார்த்தைகளைமுன்னெடுத்துச் செல்வதா? அல்லது போரை ஆரம்பிப்பதா? தமது எண்ணம் என்ன என்பது குறித்து விடுதலைப் புலிகள் இயக்கம் திடமான அறிவித்தல் ஒன்றை வெளியிட வேண்டும் என்ற ஜே.வி.பி.யின் அமைச்சர் அநுரகுமார திசநாயக்கவின் பேச்சானது அவர் சிறிலங்கா அமைச்சரவையில் தான் அங்கம் வகிக்கின்றாரா? அன்றி வேறு எங்காவது இருக்கின்றாரா? என்ற கேள்வியையே எழவைக்கின்றது.

ஏனெனில், விடுதலைப்புலிகள் இயக்கம் சிறிலங்கா அரசாங்கத்துடன் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்துகொண்டு– சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தயார் என அறிவித்துள்ளதோடு, பேச்சுவார்த்தைக்குரிய விடயத்தையும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாகவே வெளிப்படுத்தியும் உள்ளது.

அதிலும் குறிப்பாக கடந்த அரசாங்கத்துடன் நடந்த ஆறு சுற்றுப்பேச்சுவார்த்தைகளும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குக்கூடத் தீர்வு காண முடியாத நிலையில், அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையில் பேசப்பட வேண்டிய விடயத்திற்கான அடிப்படைத் திட்ட நகலையும் புலிகள் இயக்கம் முன்வைத்துள்ளது.

இதேவேளை, இத்திட்ட நகலை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஆளும்தரப்பு முழுமையாக ஏற்றுக் கொள்ளாதுவிட்டாலும், அதன் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது எனவும், அதற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளது.

ஆனால், இப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படாமைக்கு இவ் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுவார்த்தை குறித்து பேசப்படும் வேளையில் இறுதித் தீர்வு குறித்துப் பேசப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடும் – இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் உடனடியாக அரசாங்கத்தை விட்டு வெளியேறிவிடுவோம் என்ற ஜே.வி.பி.யின் மிரட்டலுமே காரணமாகும்.

அதாவது, இன்று இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வு முயற்சிகளுக்கு தற்பொழுது முட்டுக்கட்டையைத் தோற்றுவிப்பதாக ஜே.வி.பி.யின் நிலைப்பாடே உள்ளது. ஜே.வி.பி.யின் துணையின்றி அரசாங்கத்தைத் தக்கவைக்க முடியாத நிலையில் உள்ள சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டை உதாசீனம் செய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியாததொரு இக்கட்டானதொரு நிலையில் உள்ளார்.

இந்நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஜே.வி.பி.யே பெரும் முட்டுக்கட்டை போடுவதாகவுள்ளது . ஆகையினால், பேச்சுவார்த்தையா? யுத்தமா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியது ஜே.வி.பி.யினரே ஒழிய விடுதலைப்புலிகளோ, தமிழ் மக்களோ அல்ல.

போரா? சமாதானமா? எனத் தமிழ் மக்களையும், தமிழ்த் தலைவர்களையும் நோக்கி சவால்விடும் சிங்கள ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகளில் அமைச்சர் அநுரகுமார திசநாயக்க முதலாவது நபர் அல்ல. தமிழ் மக்கள் சாத்வீக ரீதியில் தமது உரிமைக்கான கோரிக்கைகளை முன்வைத்து, நின்றபோதே இத்தகைய கோரிக்கைகள் விடுக்கப்பட்டுவிட்டன. இவர்களுள் சிறிலங்காவின் பெரும் தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவில் இருந்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வரையில் அடங்குகின்றனர்.

ஆனால் இவ்வாறு சவால்விட்டு, தமிழ் மக்கள் மீது பெரும் போரைத் தொடுத்த எந்த சிங்கள ஆட்சியாளர்களும் சரி, அரசியல்வாதிகளும் சரி தமிழ் மக்களை ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யவும், அவர்களின் சொத்துடமைகளையும், தொழில் நடவடிக்கைகளையும் அழிக்கவும் முடிந்துள்ளதே தவிர தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை வெற்றி கொள்ள முடியவில்லை.

இந்நிலையில் தமிழ் மக்களும், விடுதலைப்புலிகளும் சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தையும், அரசியல் தீர்விற்கான வாய்ப்பையும் வழங்கியுள்ளபோதும், போரா? சமாதானமா? எனக் கேள்வி எழுப்பும் அமைச்சர் அநுரகுமாரதிசநாயக்க ஜே.வி.பி.யின் டாங்கிற்கு போரை நடத்த விரும்பினால் அதற்குத் தமிழ் மக்களோ, புலிகளோ எதுவும் செய்துவிட முடியாது. ஆனால், தமிழ் மக்கள் மீது போரைத் திணித்த எந்த சிங்கள ஆட்சியாளர்களும் தமது குறிக்கோளில் வெற்றி அடையவில்லை என்பது மட்டுமல்ல, நாட்டிற்கு நன்மை தேடிக் கொடுத்ததாகவும் வரலாறு இல்லை என்பதே கடந்த கால நிகழ்வாகும்.

# இ.த.அ. சபை யோசனைக்கு எதிராக

# கருத்தரங்குகளை ஜே.வி.பி நடத்தும்

புலிகள் முன் வைத்திருக்கும் இடைக்கால நிர்வாக யோசனைகளுக்கு கடுமையான அதிருப்தியினை வெளியிட்டு வரும் ஜனதா விமுத்திப் பெரமுன "உண்மையான எதிரிகள் யார்'' என்ற தொனிப்பொருளில் நடளாவிய ரீதியில் கருத்தரங்குகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஆறாம் திகதி முதல் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் ஜே.வி.பி முக்கியஸ்தர்களான விமல் வீரவன்ச, ரில்வின்சில்வா, அநுரகுமார திசாநாயக்க, நந்தன குணதிலக ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை, சமாதான முயற்சிகள் பொருளாதாரச் செயற்பாடுகள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இந்தக் கருத்தரங்குகளில் விளக்கமளிக்கப்படுமென ஜே.வி.பி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# பிராந்தியங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு மூலம்

## 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்வோம்

### சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா

பிராந்தியங்களுக்கிடையிலான ஒத்துழைப்பின் மூலம் 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமராதுங்க தெரிவித்துள்ளார்.

உலக மயமாக்கல் மற்றும் பிராந்திய பொருளாதார பிரதிபலன்களை கிராமங்களிற்கு எடுத்துச் செல்லவேண்டிய தேவை நிலவுவதாகவும் சனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் "விம்ரெற்" அரசமட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சனாதிபதி இக் கருத்தினை முன்வைத்துள்ளார்.

இம் மாநாட்டில் பங்களாதேஷ், இந்தியா, இலங்கை, மியான்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளைச்சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டனர். பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளும் இம்முறை இம் மாநாட்டில் கலந்து கொண்டமை விசேட அம்சம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனை சனாதிபதி சந்திரிகா வரவேற்றுள்ளார்.

இக்குழுவின் ஊடாக வலயங்களிற்குள் பொருளாதார பிரதிபலன்களை ஈட்டிக் கொண்டதாகத் தெரிவித்த சனாதிபதி வெற்றி பெற வேண்டிய மேலும் பல்வேறு துறைகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியதுடன் 'விம்ரெற்' அமைப்பிலுள்ள நாடுகள் பொருளாதார வளர்ச்சிப்பாதைக்குள் சென்றுள்ளன. இதனது பிரதிபலன்கள் உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை எடுத்துச் செல்லப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். மேலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் முன்னேற்றப்பட வேணடியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்திய சனாதிபதி இது பொருளாதார அபிவிருத்தியின் அடிப்படை அம்சம் என்றும் கூறினார்.

# பேருந்துப் போக்கு வரத்து நடவடிக்கையில்

## அரசியல் தலையீடுகள் அதிகரிப்பு

### குற்றஞ் சாட்டி ஜே.வி.பி. பிரதமருக்குக் கடிதம்

பேருந்துப் போக்குவரத்து நடவடிக்கைகளில் அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர்களால் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடன் கூடிய கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த கடிதத்தில் பேருந்து நிறுவனங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர்கள் தமது கடமைகளை பொறுப்பேற்க விடாமல் சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்கங்கள் செயற்பட்டுவருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பொது மக்களுக்குரிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத அளவிற்கு அரசியல் தலையீடுகாரணமாக செயற்பாடுகள் முடங்கியுள்ள இந்த நிலைமையினை உடனடியாக கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதமர் முன்வரவேண்டும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுதுள்ளது. காலதாமதமின்றி இதற்குரிய நடவடிக்கையினைப் பிரதமர் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ள ஜே.வி.பி. நடவடிக்கைகள் எடுக்கப்படாது விட்டால் தாம் சில முக்கியமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்றும் எச்சரித்துள்ளது. (32)

# கொட்டாவவில் கொல்லப்பட்டோரின்

## உறவினர்களிடம் விசாரணை

கொட்டாவவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை கருணா குழுவைச்சேர்ந்த ஏழு பேரும் மற்றொருவரும் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக இதுவரை 200 இற்கும் மேற்பட்டோர் பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொட்டாவ பகுதி மற்றும் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களே இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் கே.பி.பத்திரான தெரிவித்துள்ளார். இதே வேளை இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு மேற்படி கொட்டாவ வீட்டை வாடகைக்குப் பெற்றுக் கொடுத்த தரகர் தலைமறைவாகியுள்ளதாகவும், இவரைத் தாங்கள் தேடி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் இச்சம்பவத்தில் உயிரிழந்த எண்மரில் ஏழு பேரது சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன. ஒருவரது சடலம் அடையாளம் காணப்படவில்லையெனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

# சமாதான நீதிவான் நியமனத்தில்

## புதிய நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படும்

### நீதியமைச்சர் தகவல்

சமாதான நீதிவான் நியமனம் தொடர்பாக புதிய நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும், துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டுள்ளவர்களின் பதவிகளை இரத்துச் செய்யவும் வலியுறுத்தப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் ஜோன் செனிவிரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்துடன் இடம் பெற்ற விசேட சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். சமாதான நீதிவான் என்ற கௌரவப் பதவி இன்று பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்யபட்டு வருகிறது. கிராமிய மட்டத்தில் இப் பதவியை வகிப்பவர்கள் சிறந்த சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ளனர் ஆனால் நகர மட்டத்தில் நியமனம் பெற்றுள்ள பலர் இப் பதவியை வைத்துக் கொண்டு பணம் சம்பாதித்து வருகின்றனர். இவ்வாறானவர்கள் தொடர்பாக முறைப்பாடுகள் பல கிடைக்கப்பெற்றுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். சமாதான நீதிவான் பட்டம் பெற்ற சிலர் நீதிமன்றங்களினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். வேறு சிலர் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வழக்குகளை எதிர் நோக்கியுள்ளனர். குறிப்பிட்ட ஒரு மாவட்டத்திலுள்ள கிராமமொன்றில் 80 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அந்த 80 குடும்ப உறுப்பினர்களும் நாட்டில் ஒவ்வொரு இடங்களிலும் சமாதான நீதிவான் என்ற பட்டம பெற்றுள்ளார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு மாவட்டத்திலேயே

## டெங்கு நோயின் தீவிரம் அதிகம்

கொழும்பு கம்பகா ஆகிய பிரதேசங்களில் பரவிவந்த டெங்குக் காய்ச்சலின் அளவு சற்றுக்குறைவடைந்துள்ள போதிலும் நோயாளர்களின் எண்ணிக்கையில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லையென சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப்பிரிவின் பணிப்பாளர் நிகால் அபேசிங்க தெரிவித்துள்ளார். டெங்குநோய் காரணமாக இதுவரை 60 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டில் இதுவரை பத்தாயிரத்து முந்நூற்று எண்பத்தைந்து பேர் டெங்குநோயினால் பாதிப்படைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கொழும்பு மாவட்டத்தையே சேர்ந்தவர்கள் என சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# சமாதான சூழலைத் தக்க வைப்பதில் சந்திரிகா அக்கறையற்றுள்ளார்

## யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

சனாதிபதி சந்திரிகா தற்போதைய சமாதான சூழலை தக்க வைத்துக் கொள்வதில் அக்கறையற்றிருக்கின்றார். அவரது செயற்





பாடுகள் அனைத்தும் சமாதானத்திற்கு எதிரான போக்காகவே உள்ளதாக யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி கூறியுள்ளார்.

நேற்று நெல்லியடி முருகன் ஆலயப் பொது மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் உரையாற்றுகையில் " இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்ற வேளை இராணுவ ரீதியில் இரு தரப்பும் சமநிலையில் இருந்தன.


ஆனால் இன்று சனாதிபதியோ கடற்படைக் கப்பல்களை வாங்கியும், படையினருக்குப் பயிற்சிகள் ஆலோசனைகள் என்பவற்றை வழங்கியும் பல வழிகளாலும் படைத்தரப்பின் வலுவைக் கூட்டி இராணுவச் சமநிலையை மாற்றப் பாடுபடுகிறார்.

அதேவேளை மறுபுறத்தில் தமிழ்த் தேசிய ஒற்றுமையை உடைக்கப்பாடுபடுகின்றார். அதற்கு கருணா பிரச்சினையை தனது சுயலாபத்திற்கு பயன்படுத்துகிறார். ஆனால் அதில் அடைந்து வரும் தோல்விகள் மூலம் தமிழ்த் தேசிய ஒற்றுமையினை என்றுமே இனி உடைக்க முடியாதென்ற உண்மையை உலகிற்கு அறிவித்துவிட்டார். இவ்வாறானதொரு நிலையில் மீண்டும் ஒரு ஆக்கிரமிப்புப் போர் தொடங்குமாயின் அதில் வெல்லப் போகிறவர்கள் நாங்களே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (27)

# பன்னங்கண்டி ஆற்றுப்பகுதியில் 10இற்கு மேற்பட்ட செல்கள்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி- பன்னங்கண்டி ஆற்றுப்பகுதியில் பத்திற்கு



மேற்பட்ட வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பன்னங்கண்டி பொது மக்களால் ஆற்றுக்கு மேற்பகுதியில் உள்ள பற்றைக் காட்டினுள் பத்திற்கு மேற்பட்ட 5 அங்குல செல்களை கண்டுபிடித்து வட்டக்கச்சி அரசியல் துறையினருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற அரசியல் துறையினர் அவ் வெடிபொருட்களைப் பார்வையிட்டுள்ளனர். அத்துடன் குறித்த பகுதிக்கு எவரையும் செல்ல வேண்டாம் எனவும் மக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

கண்டறியப்பட்ட வெடிபொருட்கள் மரக்கிளைகளினால் மூடப்பட்டுள்ளன. இவற்றை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை சிவிக் சென்ரர் வலயப்பொறுப்பாளர் இளையவன் மேற்கொண்டு வருகின்றார். (12)

### ஏழு..

இவர்கள் இன்று அக்கரைப்பற்று மாவட்ட நீதி மன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

### பம்பலப்பிட்டி..

டுத்துமெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டின் நீதியை நிலைநாட்டத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சுட்டுக்

கொள்ளும் கருணா அணியினருக்குப் புகலிடமாக இராணுவப் புலனாய்வுத் துறையால் பயன்படுத்தப்பட்டு வருவதாக இணையத்தளம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. கொட்டாவவில் கொல்லப்பட்ட நீல் தம்மிக்க என்பவர் வெலிக்கந்தையைச் சேர்ந்தவரே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

### பேச்சுவார்த்தைகளை

பயன்படுத்தத் தவறினால் சர்வதேச உதவிகளையும் அமெரிக்காவின் ஒத்துழைப்பையும் இழக்க வேண்டி ஏற்படும் என்றும் கூறினார். (32)

### அன்ரன்...

உயர்ஸ்தானிகர் ஹான்ஸ் பிரஸ்கரும் கலந்து கொண்டுள்ளார். இலங்கையின் சனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்புக் குறித்து இவர்கள் அன்ரன்பாலசிங்கத்துக்கு எடுத்துக் கூறியுள்ளனர். இதுதவிர சமாதான முயற்சிகள் குறித்த தற்போதைய சூழ்நிலை, கிழக்கு நிலவரங்கள், அரசின் அசமந்தப்போக்கு, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் நிலை, இடைக்கால நிர்வாக அலகு போன்ற பலதரப்பட்ட முக்கிய விடயங்கள் குறித்தும் இப்பேச்சுவார்த்தையின் போது பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நேற்றைய பேச்சுவார்த்தை முன்னேற்றம் ஏதும் அற்றதாக முடிவடைந்துள்ளதென லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.தமது தரப்பில் பேச்சுக்கான தாமதங்கள் இல்லை என்றும், அரசாங்கமே பேச்சுக்களை ஆரம்பிக்கும் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும், தம்மால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு காணப்படும் போது மீண்டும் பேச்சுக்களில் இணைவதில் தடையில்லை எனவும் இச்சந்திப்பில் கலாநிதி அன்ரன்பாலசிங்கம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### பல தமிழர்..

யாளம் காணப்பட்டுள்ளது எனவும் பொத்துவில் கொத்தியாபுலை என்னுமிடத்தைச் சேர்ந்தவரென்றும் இவர் கொழும்பு நகரில் வசித்து வந்தவர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவரது மனைவியை அழைத்து வந்து சாட்சியைப் பதிவு செய்துள்ளதாகப் பொலிசார் கூறுகின்றனர்.

கொல்லப்பட்ட புளொட் மோகன் புளொட் கும்பலில் இருந்து வெளியேற்றப்பட்டவர் ஆவார் இவர் 1990 இல் இருந்து 1998, 1999 காலஆண்டுகள் வரையில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையுடன் இணைந்து மட்டக்களப்பில் வெளிப்படையாக இயங்கியவர் ஆவார்.

பின்னர் இவர் கொழும்பிலுள்ள பாதுகாப்புத் தொடர்பான பயங்கரவாத ஒழிப்புப் பிரிவு" என்ற அமைப்போடு செயற்பட்டு வந்ததாகவும் அறியவருகிறது. முக்கியமாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஒரு கூட்டமைப்பில் புளொட் மோகன் முக்கிய பங்காற்றியதாக தகவல் தெரிவித்தவர்கள் கூறுகின்றனர்.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கைதாகிக் காணாமற் போனவர்கள் விடயத்தில் புளொட் மோகன் சம்பந்தப்பட்டிருந்தமை ஊர்ஜிதமானதொன்று என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதில்ஒருமாத காலத்திற்குள் 1000இற்கு மேற்பட்டோர் காணாமற்போயினர். அதிலும் குறிப்பாக கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாம் படுகொலையில் சம்பந்தம் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த படுகொலைகளில் புளொட் மோகனுக்கு சம்பந்தம் இருந்தது என்பது ஆணைக் குழுவின் விசாரணையிலும் உறுதிப்பட்டதாக இருக்கிறது. ஆனால் சிறிலங்கா புலனாய்வுத்துறையுடன் இருந்து செயற்பட்டதினால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படமுடியாது போனது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மனோதித்தவெல, மலிக் மீண்டும் பேச்சுவார்த்தை?

(கொழும்பு)

சனாதிபதியின் ஆலோசகர் மனோதித்தவெலவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மலிக் சமரவிக்கிரமவுக்கும் இடையில் மீண்டும் நல்லிணக்க பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் வாரப்பகுதியில் இந்தப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழீழ விடுதலை புலிகளின் இடைக்கால நிர்வாகம் குறித்து பேச்சுவார்த்தையை சனாதிபதி ஆரம்பிப்பாராக இருந்தால் அதற்கு தாம் முழு ஒத்துழைப்பையும் வழங்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி "அறிவித்திருக்கும் நிலையிலேயே இந்த புதிய பேச்சு தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது. இதேவேளை எதிர்வரும் திங்கட்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியினதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் அரசியல் மற்றும் நிறைவேற்றுக் குழுக்கள் கூடவுள்ளன.

இவற்றில் சமாதான . பேச்சுவார்த்தைகள் மற்றும் அதனை முன்கொண்டு ஏதுநிலைகள், அதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால தன்னாட்சி அதிகாரம் என்பன தொடர்பில் ஆராயப்படவுள்ளன.(3

### அவசர கலந்துரையாடல்

கிளி.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் நியமனம் தொடர்பாக இன்று மாலை 3மணிக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் அவசர கலந்துரையாடல் நடைபெறவுள்ளதால் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# தி.மு.க தலைவர் கருணாநிதி, சந்திரசேகரன் சந்திப்பு

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் நேற்றுமுன்தினம் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு.கருணாநிதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன் போது இங்கையின் இனப் பிரச்சினை தொடர்பான தற்போதைய நிலைமைகளை முன்னணியின் தலைவர் விளக்கினார். அத்துடன் சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடைய இந்தியாவின் ஒத்துழைப்பின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வின் போது அதில் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார். இந்தக் கருத்துக்களைச் செவிமடுத்த திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு.கருணாநிதி இந்த விடயங்களைப் புதுடில்லி நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்வதாக உறுதியளித்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

### இராணுவ

இராணுவ புலனாய்வு அதிகாரியாக செயற்பட்ட மொனாட் என்பவருடன் இணைந்து பல தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதுமல்லாது பல தமிழினப் படுகொலைகளை நேரடியாகச் செய்தவரென்று பல ஊடகங்களினால் குற்றம் சாட்டப்பட்ட இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல விவசாயிகளிடமும், வர்த்தகர்களிடமும் கப்பம் பறித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### கிளி...

குரியவர்களின் பெயர்கள் வெளியாகியுள்ள நிலையில் இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தைச் சார்ந்த எந்த வொரு பட்டதாரியின் பெயரும் அறிவிக்கப் படாமை கிளி.மாவட்டபட்டதாரிகள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்ட வன்னிப்பிரதேச மாணவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சிறிலங்கா அரசின் கொடூர பொருளாதார தடைகளுக்கு மத்தியிலும் கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று பட்டம்பெற்று வெளியேறியுள்ள நிலையில் அரசின் இந்த பாராபட்ச போக்கு பட்டதாரிகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எமது சங்கம் கோரி நிற்கின்றது. மேற்படி நியமனத்தில் ஏற்படுத்தப்பட்ட புறக்கணிப்பு ஓரிரு நாட்களில் முடிவுக்கு வராத பட்சத்தில் கிளிநொச்சி மாவட்ட பட்டதாரிகள், வெகுசனப் போராட்டங்களில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


### வாடகைக் கார் உரிமையாளர் கழகம் வன்னி

## பொதுச்சபைக் கூட்டம்

வாடகைக் கார் உரிமையாளர் கழகத்தின் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 07.08.2004 ஆம் நாள் சனி காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். உறுப்புரிமை பெற்றுள்ள உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

"நன்றி"

நிகழ்ச்சி நிரல்

* அகவணக்கம்.
* தலைவர் உரை.
* செயலாளர் சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
* கணக்காளர் கணக்கறிக்கை வாசித்தல்.
* சென்ற நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு சேவை நலன் பாராட்டு நிகழ்வு
* ஊர்திகளின் பணி தொடர்பாக ஆராய்தல்.
* ஏனைய விடயங்கள்.
* நன்றி உரை.

தேவதாஸன் ரூபன் (இராகுலன்)
தலைவர்.

(4674)

தகவல்:-
கந்தையா நிர்மலன்
செயலாளர்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.